தொழிலாளன்
V.2. No:30 1 Aug 1929

©

JL
ஒ211,N28KN
N29.2.30
189065

127

KALANILAYAM. தனிப்பிரதி ரு. 0 3 0

# கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 ஹு ஆகஸ்டு மீ 1உ [No. 30.

பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| 1. | தலையங்கம் (Leader). | 581 |
| 2. | வில்லிபாரதம் (காண்டவதகனச் சருக்கம்) T. S. நடராஜபிள்ளை B.A., B.L. | 583 |
| 3. | தமிழ்ப் பாடம் (திருவேங்கடமாலை) | 584 |
| 4. | குலசேகரர் (பேயாழ்வார்) T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. | 586 |
| 5. | அப்பர். E.N. தணிகாசலமுதலியார் B.A., B. L. | 588 |
| 6. | சிந்தாமணி நீதிச்செய்யுள் V. பரமசிவன் | 590 |
| 7. | மாறன் பாப் பாவினம் (பரிபாடல்) | 591 |
| 8. | கம்பராமாயணம் (வரைக்காட்சிப் படலம்) T. N. சேஷாசலம் B. A., B. L. | 592 |
| 9. | மலர்வனம் "மதுகரம்" | 595 |
| 10. | அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி | 596 |
| 11. | வர்த்தமானம் | 599 |


சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமாயினும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி. யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

## கலா நிலயம்

### கல்சரும் கவிதையும்.

189865

I

நான்கு வாரங்களாக நம் தலையங்கங்களில் கல்சரின் அவசியத்தை ஒருவாறு விளக்குதற்கு முயன்றோம். செய்யப் புகுவதன்முன் செயப்படுபொருளின் தன்மையும் பயனுந் தெருண்டுகொள்ளற்கு இன்றியமையாதவோர் நிலை கல்சர்நிலை யென்பதும்; தெருண்டவப் பொருள் கடவுளின் கருத்திற்கு இசைந்துள தென்னுந் துணிபு தென்படாவரையில் கருமமொன்றும் கைக்கொள்வது கல்சரின் இயல்பாகாதென்றும்; நல்லாராய் எல்லாரும் நண்ணி வாழவேண்டு மென்னுமொரு இனிமையின் அருமையே தனதிலக்காகக் கொண்டு விவகரிப்பதல்லாது, செல்வமும் செல்வாக்கும் அவைகளுக்குரிய பிற சாதனங்களும் நலஞ்சில மக்களுக்கு நல்குமெனல் கல்சரின் கண்களுக்குக் காணாத காட்சியென்றும்; எந்தெய்வம் தந்தெய்வமென்று எந்திரங்களை வழிபடும் சிறு மாநுடத்தின்பால் பெருமோகங் கொள்ளாமல் காக்கவல்லது கல்சர் ஒன்றே என்றும்; சுதந்தரம் விடுதலை சமத்துவம் சீர்திருத்தம் முதலிய மொழிகளை வழங்குவார் பலராயினும் அச்சொற்களுக்கும் அவ்வவற்றிற்குவாய்ந்த உண்மைப் பொருள்களுக்கும் இடையே தூதுநடந்து இரண்டையும் பயன்படச் சந்துசெய்யும் திறமை கல்சருக்கே உளதென்பதையும், தன்னிஷ்டமெனுந் தரித்திரத்தில் உழலாமல் கடவுளின் கருத்தென்னும் செல்வத்தில் சேர்த்துவைக்கும் கல்சரைக் கைவிட்டால் அப்புறம் கூடுவதொன்றுமில்லை என்பதன் காரணத்தையும், இன்னபல இவைகளுடன் தொடர்புடையவைகளையும் இதுகாறும் காட்டினோம். மேலினி நாம் உரைப்பதற்கிருப்பனவற்றை உய்த்துணர்தற்கு இங்கிதனைத் தொகுத்துச் சுட்டவேண்டி நேர்ந்தது.

ஆஸ்கார் வைல்ட், கலைத்திறம் நுனிக்கும் திறத்தினைப் பற்றிக் கூறியுள்ள மொழிகளைத்தழுவி ஸ்ரீமான் K. இராஜகோபாலன் வரைந்துவந்து சென்றவாரத்துடன் முற்றுப்பெற்ற கட்டுரையைக் கருத்துட்கொண்டோர், செய்வதைக்காட்டிலும் சிந்தித்திருப்பதன் சிறப்பைக் கூறுமாற்றால் அதுவும், நம் நான்கு தலையங்கங்களும் பெரும்பாலும் ஒத்துநடக்கக் கண்டிருப்பார். "ஆரவாரஞ் செய்துதிரியும் அரசியல் வாதிகளும், சமயப்பிரசாரஞ் செய்வோரும் சமூகச் சீர்திருத்தகாரர்களும் தத்தம் வயிற்றிற்கு வழிதேடி வாயாடும் கீழ்மக்கள். அவர்களை யொழித்துச் சிந்தனையால் சிறப்புற்ற உள்ளுலகில் வாழாதார் வாழாதாரே," என்ற வாக்கியம் ஒன்று, அவ் வாஸ்கார்

வைல்டினின்று மொழிபெயர்ந்து ஸ்ரீ. இராஜகோபாலனது கட்டுரையின் இறுதியில் தோன்றியது. இக்கடுஞ்சொற்கள் மேனாட்டுப் பொதுஜன வாழ்க்கைக்குப் பொருந்துமோ, யாதோ! இந்நாள் நம்நாட்டு விஷயத்தில், இவ்வகைத் துறைகளில் ஈடுபட்டிருப்பவர் சிற்சிலர்தவிர ஏனையோர் "வயிற்றிற்கே வழி தேடி வாயாடும் கீழ்மக்கள் ஆகார்" என்பதை உன்னி, எல்லாரும் அவ்விதமே எனத் தைப்பது போன்ற அவ்வாக்கியத்தை நாம் நீக்கிவிட்டோம். மெய்யுணர்வின்மையால் முயல்கின்ற இப்பேதமையை வன்சொல்வழங்கி யழைப்பானேன்! எனினும், காரிய சாத்ய நிபுணர்களென்ற நினைவில் பற்பல நிகழ்த்துதற்கு முற்படுதல் அறிவின் முதிர்ச்சிக்கோர் அடையாள மன்றென்னும் கொள்கையுடையார் ஆஸ்கார் வைல்ட் ஒருவரே அல்லர். கண்ணபிரான் கூற்றாகச் சென்றவாரம், "உலகினர் விழித்திருக்கும் நிலையில் மெய்யுணர்ந்தவன் உறங்குகின்றான்; அவர்கள் உறங்குநிலையில் இவன் விழித்திருக்கின்றான்" என்று ஸ்ரீமான் T. P. மீனாக்ஷிசுந்தரம், தன்னுடைய 'குலசேகரர்' கட்டுரையில் எடுத்துக்காட்டியதன் பொருளும் இன்னதேயாம்.

ஆதலின், அறிதுயிலமர்ந்த ஆனந்தநிலை இதனைத்தான் நாம் கல்சர் என்று போற்றி வந்தோம். அதன் தன்மையையும் பயனையும் கூறியதோடு எம் கருமம் முற்றாது. அந்நிலை எய்துதற்குரிய நெறியையும் ஈண்டு இயம்புதல்வேண்டும். இந்நிலை மனத்திற்கியன்றது; மனத்தின் சார்பானது. தேகப்பயிற்சி அவயவங்களைச் செம்மைசெய்து அவைகளின் தன்மை பிறழாமல் தொழில்புரிய வைப்பதுபோன்று மனத்திற்கும் இக்கல்சர்நிலை யடைதற்கேற்ற பயிற்சிவேண்டும். இச்சிறு உண்மையைப் பெரும்பாலோர் மறந்துவிடுகின்றனர். மறந்து, விதிகளையும் விலக்குகளையும் விளம்பியவுடன் யாவரும் தாம் எண்ணியவாங்கு ஒழுக்கமும் விழுப்பமும் உடையவ ராகிவிடுவார் என நம்பி விவகரித்தலால் விளையும் நலம் ஒன்றுமில்லை. எனின், மனமாண்பு மேம்பட எப்பயிற்சி யாவற்றினும் சிறந்ததென்பதைச் சிறிது செப்புவோம்.

மனத்தின் முயற்சிகள் இருவேறு வகையன. ஒன்று பகுத்தறிவு, மற்றது மனோபாவம். எவ்வாறு பிறப்பினும், பிறந்த எண்ணங்கள் ஒவ்வொன்றும் மற்ற எண்ணங்களோடு கொள்கின்ற சம்பந்தத்தைப் பற்றிச்சிந்திக்கும் மனத்தன்மையைப் பகுத்தறிவுஎனக்கருதலாம். பகுத்தறிவு என்னுமிது ஒருநிலையேயாம், செயலன்று. மற்று, மனமானது அவ்வெண்ணங்களின்மீது தன்னுடைய வண்ணத்தைப் பூசி, பஞ்சபூதங்கள் பல்வேறு வகையில் சேர்வதால் வஸ்துக்கள் பலப்பல வேறுவேறாகிக் காண்பதுபோல், அவ்வெண்ணங்களினது சேர்க்கையால் பிற எண்ணங்கள் அமையும்படிகூட்டுங்கால் அம்மனம் 'மனோபாவம்' என்னுந் தன்மையை அடைவதாகின்றது. இம்மனோபாவம் பலவற்றை ஒன்றாய்க் கூட்டிவைக்கின்ற கொள்கையை மேற்கொண்டுளது. ஆதலால் அது, பிரபஞ்ச இயல்பிற்கும் சிருஷ்டிக்கும் பொதுவான தோற்றங்களை ஒருபொருள்படுத்தி நோக்கும் தன்மைத்து. பகுத்தறிவோ ஒன்றுவிட் டொன்றை வேறுவேறாகப் பிரித்தகற்றும். எண்ணங்களெல்லாம் வெவ்வேறாகத் தோன்றினும் அடிப்படையான வொரு பொதுப் பொருத்தம் அவைகளுக்குள் முதலாக அமைந்திருக்கின்ற தென்பதைக் கருதாமல், பொதுவான சில முடிவுகளை எய்துவிப்பதற் கேற்ற குறிகளென்றே தனித்தனியாக அவ்வெண்ணங்களைப் பகுத்தறிவு கருதுகின்றது. ஒருவிஷயத்தின் தன்மை இன்னது இன்னதென்று முன்னரே தெரிந்திருக்கின்ற அத்தன்மைகளைக் கணக்கெண்ணிக் காட்டும் பகுத்தறிவு; மனோபாவமோ அத்தன்மைகளால் தனித்தனியாகவும் ஒன்று சேர்ந்தும் அடையவல்ல பயன் யாதென்பதை உய்த்துணரும். பொருள்களுக் கிடையே உள்ள வேற்றுமையைப் பகுத்தறிவும், ஒற்றுமையை மனோபாவமும் பாராட்டுகின்றன. கருவியுங் கர்த்தாவும் போலவும், உடலும் உயிரும் போலவும், நிழலும் பொருளும் போலவும் பகுத்தறிவு மனோபாவத்துடன் சம்பந்தப்பட் டிருக்கின்றது.

இன்ன தன்மை வாய்ந்ததாய மனோபாவம் புறத்திலே தோன்றப் புரிந்ததே கவிதை எனப்படும். மனிதன் எந்நாள் சிருஷ்டிக்கப்பெற்றானோ அந்நாளிலேயே கவிதையும்அவனுடன்தோன்றியவோர் திப்பிய தத்துவம். மனிதர் ஒருவிதத்தில் இல்பொருளுவமையாய்ப் புள்ளாங்குழலை ஒத்திருக்கின்றார். அவ்விசைக் கருவிக்குள் காற்றானது ஒருபுறத்தில் செலுத்தப்பெற மறுபுறத்தில் அக்காற்று வெளிவரலாகின்றது. அவ்வாறே வெளிநின்று உள்ளும் உள்நின்று வெளிக்கும் பற்பல் வுணர்ச்சிகள் மனிதனை ஊடுருவிச் செல்வனவாகித் தொடர்கின்றன. உட்சென்ற வன்மைக்கும் மென்மைக்கும் ஏற்றவாறும், வெளிவரும் துவாரங்களின் தூரங்களுக்கு ஏற்றவாறும், அக்காற்று வெவ்வேறு சுவரங்களை மாற்றிமாற்றித் தருகின்ற தன்மையை அறிவோம். புள்ளாங்குழல் மனிதனை ஒத்திருக்கின்றதெனும் உவமை இதுவரையில்தான் செல்லும்; இதன்மேல் செல்லாது. ஏனெனின், சுவரங்களை மாத்திரமே புள்ளாங்குழல் தானாக்கொடுக்க இயலுமேயல்லாது, சுருதியும் கமகமும் தருகின்ற வன்மை அதனிற்கு இல்லை. இவ்விரண்டும், இசைப்பவன் செயல்கள். மனிதனுடைய தன்மையோ அவ்வாறன்று. சுரமன்றிச் சுருதியுந் தானே சேர்த்துக் கொள்வான் இவன். உட்சென்ற உணர்வினால் இயக்கமொன்று அங்கு உண்டாகின்றது. அவ்வியக்கத்தை, அதனை உறவித்த உணர்வினோடு சமஞ்செய்து அமைதிபெற வைக்கின்ற தத்துவம் ஒன்று மனிதனது உள்ளத்தின்பால் என்றுமுளது. ஆதலான் உட்கொண்ட காற்றைத் தன்னுளே தானாகவே இசைபடச் சேர்த்தும் பிரித்தும் விடவல்ல குழலொன்று உளதாயின் அதுவே மனிதனை முற்றிலும் ஒக்கும். விளையாடிக்கொண்டிருக்கும் குழந்தையானது தன்னுடைய உவகையைத் தானாகவே கூவியுங் குதித்தும் வெளிப்படுத்தும்: அக்குழந்தையின் குரல் ஏறிஇறங்குகின்ற ஒவ்வொரு மாறுபாடும், அது ஆடுகின்ற கூத்தின் விகற்பம் ஒவ்வொன்றும் அவ்வுவகையை எழுப்பிய உணர்விற்கு ஏற்றதா யமைந்திருப்பது திண்ணம். உண்மையில் இக்குரலும் குதிப்பும் அவ்வுணர்வின் அபிநயங்களேயாம். உணர்வு காரணம்; அக்காரணத்தின் காரியம் உவகை. அவ்வுவகை நிகழ்கின்ற காலத்தைக் குரலாலும் குதிப்பாலும் நீட்டிக்கின்றவாற்றால் இக்குழந்தை, அவ்வுவகைக்குக் காரணமாயிருந்த உணர்வின் நினைவையும் நீட்டித்துக்கொள்ளநேரிடுகின்றது. ஒரு குழந்தைக்கும், அதனைக் களிப்புறச் செய்கின்ற விளையாட்டுப் பதுமைக்கும் உள்ள தொடர்பு இத்தகையது. உயரிய விஷயங்களுக்கும் கவிதைக்கும் உளதாய வுறவும் இன்னதே.



MADRAS

# வில்லி பாரத விளக்கம்

## ஆதி பருவம்

[565-வது பக்கத் தொடர்ச்சி]

காண்டவ தகனச் சருக்கம்.

தளைத்த பாதபத் தலைதொறும்
பற்றின சருகுதிர்த் திளவேனிற்
கிளைத்து மீளவும் பொறியளி
யெழவளர் கிசலயங் களும்போன்ற
திளைத்த வேர்முதற் சினையுற
வெரிவன தீபசா லமும்போன்ற
வளைத்த கானிடை மெலமெல வுள்புகு
வன்னியின் சிகா வர்க்கம்.

[தீயால் வளைக்கப்பட்ட கானகத்திடையே மெள்ள மெள்ள உள்புகுந்த நெருப்பின் சுவாலைப் பகுதிகள், பிணைந்துள்ள மரங்களின் உச்சியில் பற்றியவை, காய்ந்த இலைகளை உதிர்த்து இளவேனிற்குடைந்து மீண்டும் புள்ளிகளுடைய வண்டுகள் மொய்க்க வளரும் தளிர்களைப் போன்றிருந்தன; நெருங்கிய வேர்முதல் கிளைவரைப் பற்றியெரிகின்றன, தீபவிருக்ஷமும் போன்றிருந்தன]

உன் விருப்பின்படி யுனக்குணா வீந்தனஞ் சென்று கொள்கென நாரணனார் நவின்றவளவிலே, பெற்றனன்போற் பெருமகிழ்ச்சி யுடையவனாய் 'வாளமாகவோர் பவளமால்வரை நெடுவாரியை வளைந்தென்ன' அக்கானகத்தை யங்கி சூழ்ந்தனனாதலாற் கடையடியில் 'வளைத்த கானிடை' யென்றார். அடவியிலடர்ந்துள்ள தருக்க ளீரமானவை யென்றுகொண்டு அவைகளைத் தாவிப்பற்றுதற்குக் காலஞ்சென்றமைதோன்ற 'மெலமெல வுள்புகு வன்னி' யென்று கூறப்பட்டது. முதன் முதலில் வட்டமாக அவ்வனத்தி னெல்லையையே சுற்றி, முற்றும் பற்றிப் பின்னர் நடுப்பகுதிகளையடைத லியற்கையாகலின் உள்புகு வன்னி யென்றடைமொழி தரப்பட்டது.

மூன்றாமடியில் வேர்முதற் சினையுற வென்று அடிமுத லுனிவரையி லெரியும் மரங்களைக் குறிப்பிட்டதால், பாதபத்தலை யென்றவிடத்து மரங்களிற்பற்றியவென்று பொதுப்படப் பொருள்கூறாது தலையென்னும் மொழிக்கேற்ப உச்சியென்று கூறப்பட்டது. பாதபம் என்னும் மொழி காலால் நீர்முதலியவுணவையுண்பதென்று பொருள். வன்னியின் சிகாவர்க்கம் தளைத்த பாதபத் தலைதொறும் பற்றின எனமுடித்துப் பொருள்கூறவும் இடமுண்டு. அதுபோது இரண்டாமடிக்குச் சிகாவர்க்கம் கிசலயம் போன்றன என்று எழுவாய் வருவித்து முடித்துப் பொருள்கொள்ள வேண்டும்.

பழுத்த இலைகளையுதிர்த்து, வெறும் கிளைகளாய் நின்று இரவியின் கிரணங்களியாவு மொருங்கே சொரியப்பெற்று இளைத்த அம்மரங்கள், மீண்டும் அச்சுவாலை பற்ற, செந்நிறமுள்ள வன்னியே தளிர்களும், தீப்பற்றும்போது உண்டாகும் கருநிறமுள்ள புகையே மொய்க்கும் வண்டுகளாகவும், அப்புகையினிடையிடை தோன்றும் வெண்புகையே யவ்வளியின் புள்ளிகளாகவும் அமையப்பெற்றுப் பொலிவுற்றன. பருத்த கிளைகள் வெறுங்கிளைகளாய் நிற்கும்போது அவைகளைக் கவ்விப்பற்றுஞ் சிறுதீ, நிலைநின்றெரிவதன்முன், அவைகளின் மேற்புறத்தே தாவிச்சென்று படர்ந்து சூழும்போது சிறுதளிர்கள்போற் றோன்றுவதியற்கை. மேலும், ஈரத்தால் பொடிக்கும்போது அத்தீ பிளவுபட்டுப் பரந்ததளிர்போலவும் காணுமன்றோ? அவ்வாறு பொடிக்கும்போதம் தீப்பற்றும்போதும் உண்டாகும் சிற்றொலி வண்டுகள் முரல்வதை யொக்கும். பச்சைமரத்தில் தீப்பற்றும்போது புகைசெறிந்தெழுமாதலா லது வண்டுகள் ஒன்றன்மேலொன்று நெருங்கி மொய்ப்பது போலவும், சேர்ந்தெழுவது போலவும் தோன்றுகிறதன்றோ? கருப்புகையோடாங்காங்கே வெண்புகையும் கலந்தெழு மாதலால் அவை பொறிக்குவமையாயின. அதோடு சுடர் காற்றில் பிரிந்தெழுவதுமுண்டு; பறக்கும் அத் தீப்பொறியே வண்டின் பொறியாதலும் விசேடமே. ஆசிரியர் ஆழ்ந்த பொருள் பொதுளிய இரண்டாமடியை யாப்பதற்கெடுத்துக்கொண்ட வருத்தமும், அதைச் சிறக்கச் செப்பியவேலைப்பாடும் வியக்கத்தக்கனவே. வேர்முதல் நுனிவரைத் தீப்பற்றிய மரங்களுக்குவமை, விழாக்காலங்களில் மரம்போற் சமைத்து, மருந்துகொடமைத்துத் தீமூட்டி யெரிக்கப்படும் செய்ம்மரங்களேயாகும். இச்செய்யுளிலும் இன்னும் பின்வரும் செய்யுட்களிலும் தன் கருத்தைத் தகுந்தவண்ணம் வெளிப்படுத்த வாசிரியர் கிசலயம் தீபசாலம் சிகாவர்க்கம் என்பனபோன்ற பல வடமொழிகளையும், மொழித்தொடர்களையும் உபயோகித் திருப்பது நோக்கத்தக்கது.

தழைத்த பேரொளித் திவாகரன்
கரங்கள்போய்த் தடவியவ் வடவிக்கட்
பிழைத்த காரிருட் பிழம்பினை
வளைந்துடன் பிடித்தெரிப் பனபோலு
முழைத்த வான்புழை யொருகரத்
திருபணை மும்மதப் பெருநால்வாய்
மழைத்த குஞ்சர முகந்தொறும்
புக்குடன் மயங்கிய பொறிமாலை.

[பரந்த பேரொளியையுடைய சூரியனுடைய கிரணங்கள் சென்று தேடி, அக்காட்டில் தப்பி யொளித்திருந்த இருள் கூட்டத்தையெல்லாம் வளைந்து ஒன்றுசேர்த்து தெரிப்பன போல, குகையின் தன்மைகொண்டு பெரிதான துவாரமுடைய ஒருகையும், இரு மருப்பும், மும்மதமும், தொங்கும் பெரிய வாயுமுடைய மழைபோற் கறுத்த யானைகளோடெல்லாம் புகுந்து கலந்த தீப்பொறிகளின் ஒழுங்குகள் தோன்றின]

நகரமாந்தரின் இல்லங்கடொறுங் காணப்பட்ட சாளரவாயிலிற் செறிதரு இருளை, ஞாயிற்றின் கிரணங்கட்குத் தப்பியோடிச் சின்னெறி புகுந்ததெனக் கவி கூறியதை யிங்கே நினைவூட்டுவோம். சூரியவொளியெங்கும் பரந்து, எத்திக்கினு மணுகி, எவ்வகைப்பட்ட வொளியையும் மறைத்தொளிர்தலால் தழைத்த பேரொளி யெனப்பட்டது. மரச்செறிவினால், தினகரன் கிரணங்க ளத்தனையு மூடுருவிச் செல்லாத அடர்ந்த காடுகளில், இருட்கலந்த மங்கியவொளிமிளிரு மிடங்களிற் றிரிதருங் கரிக்கூட்டங்கள் இருட்கூட்டங்களாகவே இயற்கையிற் றோன்றும். அக்காரி

ருட் பிழம்பினைச் சேர்த்தெரிப்பனபோற் றீப்பொறிகள் மதகஜ மத்தயானைகளைச் சூழ்ந்தன. குகை போன்ற பெரிய துவாரம் என்று கரத்தினுட் புரையைக் கழறியது உயர்வுநவிற்சியாம். ஒன்றிரண்டு மூன்றுநான்கென் றெண்களையடுக்கியது, கவி முரண் தொடைகளை முடிக்கும் வல்லமையை வெளியிட்டவாறு. இவ்வகையில் சொற்களாலலங்கரித்தலில் வில்லிகைதேர்ந்தவரென்று முன்னமே பல வுதாரணமுகத்தால் விளக்கியுள்ளோம்.

அரியெ னும்பெயர் பொருமையிற்
போல்விரைந் தழற்கொழுந் துளைபற்றந்
திரிமு ழைஞ்சுக டொறும்பதைத்
தோடின கேசரிக் குலமெல்லாம்
விரியு ரோமவா லதிகளிற்
பற்றலின் விளிவுடைச் சவரங்க
ளெரிகொள் சோகவெங் கனலினு
னின்றுநின் றிறந்தன சலியாமல்

[சிங்கத்திற்கு அரியென்று வழங்கும் பெயரைப் பொருதுபோல் தீக்கொழுந்து அடல்ஏற்றின் பிடரியைப் பற்றியெரிக்க அவை பதைபதைத்து மலையின் குகைகளிலெல்லாம் புக்கொளித்தன; அடர்ந்த வாலில் தீப்பற்றலால் இறக்குந் தன்மைவாய்ந்த கவரிமா, மனமெரிந்து சோகக்கனலால் இடம்விட்டுப் பெயராமல் நின்றவிடங்களிலேயே இருந்து இறந்தன.]

அரியென்பது பலபொருட்டொருமொழி யென்பதனை யாவருமறிவர். அப்பொருள்களில் இவ்விடத்திற்குரியன தீ சிங்கம் என்பனவே. தீயானது தனக்குரிய பெயராகிய அரியை, சிங்கங்கொண்டெங்குந் திரிந் தட்டகாசஞ் செய்தலினுற் பொருமைகொண்டு அதனைப் பிடித்தது என்று கவி தன் கருத்தையேற்றியுரைக்கின்றார். தீக்கொள வவை தப்பியுய்யப் பருவதங்களின் குகைகளிலெல்லாம் புக்கொளித்தன. தம்மைச் சுற்றிக் குஞ்சரங்களும், கவரிமாவும், இரலையினங்களும் நின்றிருக்க அவைகளைக் கொன்றுதின்னவது சமயமன்று ஆதலா லுய்ந்துபோம் வழியையே நாடின. 'மகேந்திரகிரியின்மேலேறி' அநுமான் கடலைத் தாவஎண்ணி அதற்குரிய முயற்சிகளைச் செய்தபோது வானளாவிய அவனது உருவைத் தாங்காது மலை நொறுங்க, அங்கே

கட்புலம் புறத்து நாறு
வன்பறழ் வாயிற் கவ்வி வல்லிய மிரிந்த மாதோ

எனக்கண்திறவாத தன்குட்டியைபுலிவாயிற்கௌவிச் சென்றதுபோல், இவ்வனத்தில் அரிமாவும் தன் குட்டியைத் தூக்கிச் செல்லவில்லையேயென்றால், வன்பறழ்யாவும் கிரி முழைஞ்சுகளிலேயே யிருப்பனவாதலால் சிங்கங்கள் வேறிடங்களுக் கோடாமற் றங் குட்டிகளுள்ள விடங்களையே நாடிச் சென்றன. அவை இயற்கையா யோடியொளிக்கு மிடமு மதுவே; அச்சமயம் காடு தீப்பற்றலால் அவைகளுக்குத் தீயில்லாத புகலிடமும் குகையே. பிடரிமயிரில் தீப்பற்றினுல் அவை யியற்கையிற் றரைமேற்புரண்டு அத்தீயையவிக்கமுயன்று பின் வருத்தத்துட னேடினவாதலால் பதைத்தோடின என்றார் கவி.

மயிர் நீப்பின் வாழாக் கவரிமா, விளிவுடைச் சவரங்களென்னப்பட்டன. அவை யெரிகொள மனமெரிந்து செத்தன. தீயா லிறந்தனவென்றும், சோகமாகிய நெருப்பாலேயே யெரிந்தனவென்றும் அறிவுருவண்ணம் அவைநின்றநின்ற விடங்களிலேயே புடைபெயராம லிறந்தன.

# தமிழ்ப் பாடம் 82.

[ அஷ்ட பிரபந்தம். ]

[ 573வது பக்கத் தொடர்ச்சி ]

## திருவேங்கட மாலை

வாவுகவின் மந்திநுகர் மாங்கனிக்குங் கற்பகத்தின்
மேவுகவி கைநீட்டும் வேங்கடமே—தாவுகடல்
வேவவிலங் கைக்கொண்டார்வீடணனை வைத்தொ
சாவவிலங் கைக்கொண்டார் சார்பு. [ழிந்தார் 10

பதப்பிரிவு:—வாவு கவின் மந்தி நுகர் மா கனிக்கு கற்பகத்தின் மேவு கவி கை நீட்டும் வேங்கடமே தாவு கடல் வேவ இலங்கைக்கு ஒள் தார் வீடணனை வைத்து ஒழிந்தார் சாவ வில் அம் கை கொண்டார் சார்பு.

பதவுரை:—வாவு - தாவுகின்ற, கவின் - அழகிய, மந்தி - பெண்குரங்கு, நுகர் - தின்கின்ற, மாங்கனிக்கு - மாம்பழத்திற்கு, கற்பகத்தின் - கற்பகவிருக்ஷத்தில், மேவு - அமர்ந்த, கவி - குரங்கானது, கை - தனது கையை, நீட்டும் -நீட்டுதற்குரிய, வேங்கடமே- வேங்கடமலைதான்,

தாவு - அலைகள் தாவுகின்ற, கடல் - கடலானது, வேவ - வேகும்படியும்; ஒள் - பிரகாசம் பொருந்திய, தார் - மாலையை அணிந்த, வீடணனை - விபீஷணனை, இலங்கைக்கு - இலங்கைக்கு, வைத்து - அரசனாக வைத்து, ஒழிந்தார் - மற்ற அரக்கர்கள் அனைவரும், சாவ - சாகும்படியும்; வில் - தனது வில்லை, அம் - அழகிய, கை - கையில், கொண்டார் - ஏந்திபவரான திருமால், சார்பு - சார்ந்திருக்குமிடம்.

விரிவுரை:— திருவேங்கட மலையிலுள்ள மாமரமொன்றில் ஒரு பெண்குரங்கு உட்கார்ந்து அதன் கனியைத் தின்றுகொண்டிருக்கத் தேவருலகிலுள்ள கற்பகவிருக்ஷத்திலிருக்கும் ஆண்குரங்கொன்று, இம்மாங்கனிக்கு நாவூறி ஆசைப்பட்டுத் 'தா'. வென்று கைநீட்டுமென்பது முன்னிரண்டடிகளின் கருத்து. கற்பகந் தரும் கனிகளைத் தின்றுள குரங்கும் இம்மலை மாங்கனிக்கு ஆசைப்பட்டது என்று கூறுவதால் வேங்கடத்தின் வளப்பம் காட்டப்படுகின்றது. அதுவுமன்றி வானநாட்டுச் சோலையிலிருந்து ஒரு குரங்கு இங்கிருக்கும் குரங்கைக்கேட்டுக் கை நீட்டியதென்பதால் இம்மலையின் உயரமும் கூறப்படுகின்றது. இதுவுந் தொடர்பு உயர்வுநவிற்சியணி.

சீதையைச் சிறைமீட்கச்சென்ற இராமன், அணையிடத் தடைசெய்த கடலைக் கோபித்து அம்பெய்த கதை, "தாவுகடல் வேவ வில் அங்கைக் கொண்



டார்" என்பதில் அடங்கியிருக்கின்றது. கடல் கடந்தபின் அவ்விராமன், வீடணனைவைத்து ஒழிந்தார் சாவ வில் அம்கைக் கொண்டனன். "வில் அம்கைக் கொண்டார்" என்பதை வேவ, சாவ, என்னும் இரண்டு சொற்களோடும் இருமுறை சேர்த்துப் பொருள் கொள்ளவேண்டும்.

குறிப்பு:—வாவு கவின், நுகர் மாங்கனி, மேவுகவி, தாவு கடல், என்னும் இந்நான்கு தொடர்களும் வினைத்தொகைகள். இவை விரிந்தால், வாவுகின்ற கவின், நுகர்கின்ற மாங்கனி, மேவுகின்ற கவி, தாவுகின்ற கடல், என நிலைமொழிகள் பெயரெச்சங்களாகும். பெயரெச்சங்கள் காலம் மறைந்து பகுதியளவாய் நிலைமொழிகளாக நிற்குமாயின் அத்தொடர் வினைத்தொகைகளாம் என்பதை முன் (2 வது, வால்யூம், 377-பக்கம்) விளக்கி யிருக்கின்றோம்.

காந்த ளிரவலர்போற் கைபேற்பக் கொன்றைகொடை
வேந்தனெனப் பொன்சொரியும் வேங்கடமே—பூந்
[துளவின்
கான்மடங்கா மார்வத்தார் காண விரும்பினர்மே
னுன்மடங்கா மார்வத்தார் நாடு. 11

பதப்பிரிவு:—காந்தள் இரவலர் போல் கை ஏற்ப கொன்றை கொடை வேந்தன் என பொன் சொரியும் வேங்கடமே பூ துளவின் கான் மடங்கா மார்வத்தார் காண விரும்பினர்மேல் நால் மடங்கு ஆம் ஆர்வத்தார் நாடு.

பதவுரை:—காந்தள் - காந்தள் செடியானது, இரவலர்போல் - யாசகர்களைப்போல, கை - கைபோன்ற தன் மலரால், ஏற்ப - ஏற்றுக்கொள்ள, (அதனில்) கொன்றை - கொன்றைச்செடி, கொடை - ஈகையிற் சிறந்த, வேந்தன் என - வேந்தனைப்போல், பொன் - பொன்போன்ற தன் மலர்களை, சொரியும் - சொரிகின்ற, வேங்கடமே - வேங்கடமலைதான்,

பூ - அழகிய, துளவின் - திருத்துழாயின், கான் - வாசனையானது, மடங்கா - நீங்காத, மார்வத்தார் - மார்பை யுடையவரும்,

காண - தன்னைக்காண்பதற்கு, விரும்பினர் மேல் - விரும்பினவர்களிடத்தில், நால் - நான்கு, மடங்கு ஆம் - மடங்காக, ஆர்வத்தார் - அன்புடையவருமாகிய திருமாலினது,

நாடு - நாடாகும்.

விரிவுரை:—காந்தள்மலர் கைபோன் றிருக்கும். அதனைக் கவிகள் கைக்கு உவமையாகச்சொல்வர். முன் நளவெண்பாவில், (வால்யூம் 1. பக்கம் 547) "கைம்மலரைக் காந்தளென (வண்டுகள்) பாய்தலுமே, வேர்த்தாளைக் காண் என்றான்" எனக் காந்தள் மலர் கையிற்கு உவமையா யிருப்பதுபற்றி வந்துள மயக்கவணியும் இதற்குதாரணம். கொன்றைமலர் மஞ்சளாகப் பொன் நாணயம்போல் இருக்கும். காந்தள்மலர் கைபோன்று மலர்ந்திருப்பதும், அதற்கருகிலுள்ள கொன்றைச்செடியிலிருந்து மலர்கள் அதனுள் உதிர்வதும் ஆகிய இந்த நிகழ்ச்சிக்கு, ஏற்ற யாசகன் கையில் அரசன் பொன்சொரிவதை உவமையாகக் கூறுகின்றார். இது முன்னிரண் டடிகளின் கருத்து.

"காண விரும்பினர்மேல் நான் மடங்காம் ஆர்வத்தார்" என்னுமிவ் வாசகம் திருமாலினது அருளின் திறத்தை அழகாகக் கூறுகின்றது. அவர் மீது நாம் ஒருபங்கு பக்திவைத்தால் அவர் நம்மீது அதற்கு நான்குபங்கு அருள் வைக்கின்றார். நாம் அவரைச் சேரவேண்டுமென்று எவ்வளவு ஆசை வைக்கின்றோமோ அதற்கு நான்குமடங்கு ஆசை அவரும் நம்மைச்சேரவேண்டுமென்று கொள்கின்றார்.

நாகத்தின் மேற்குறவர் நன்கெறிந்த மாணிக்க
மேகத்தின் மின்புரையும் வேங்கடமே—மாகத்தின்
மாத்தாண்ட மண்டலத்தார் வாயுண் டுமிழ்ந்தளந்து
காத்தாண்ட மண்டலத்தார் காப்பு. 12.

பதப்பிரிவு:—நாகத்தின்மேல் குறவர் நன்கு எறிந்த மாணிக்கம் மேகத்தின் மின்புரையும் வேங்கடமே மாகத்தின் மாத்தாண்டன் மண்டலத்தார் வாய்உண்டுஉமிழ்ந்து அளந்து காத்து ஆண்ட மண் தலத்தார் காப்பு.

பதவுரை:—நாகத்தின்மேல் - யானையின்மீது, குறவர் - குறவர் , நன்கு - நன்றாக, எறிந்த - எறிந்த, மாணிக்கம்-மாணிக்கக்கற்கள், மேகத்தின் - மேகத்தில் தோன்றும், மின்-மின்னலை, புரையும் - ஒக்கும், வேங்கடமே - வேங்கடமலைதான்,

மா - பெரிய, கத்தின் - ஆகாயத்தில் உள்ள, மாத்தாண்டன் - சூரியனது, மண்டலத்தார் - மண்டலத்திலிருப்பவரும், வாய் - வாயால், உண்டு - (யுகப்பிரளய காலத்தில்) உண்டும், உமிழ்ந்து - (பிறகு)வெளிப்படுத்தியும், அளந்து - (மாவலியினிடமிருந்து.) அளந்துகொண்டும், காத்து - (ஆதிசேடனாக) தாங்கியும்; ஆண்ட - (இராமனாக) ஆளவும் செய்த, மண் தலத்தார்-பூமியை உடையவரும் ஆன திருமாலினது ,

காப்பு - காக்குமிடம் ஆகும்.

விரிவுரை.— மேகம்போன்ற யானையைத் தினைப்புனத்திலிருந்து ஓட்டுவதற்குக் குறவர், கையிலகப்படுகின்ற மாணிக்கங்களை விட்டெறிய, அது யானையின் மேற் போய்ப் பட்டதும், மேகத்தில் மின்னல் தோன்றுவதுபோ லிருக்கும் என்பது முதலிரண்டடிகளின் கருத்து.

திருமால் உலகத்தை எத்தனைவகையில் இரக்ஷிக்கின்றார் என்பதைக் கவி பின்னிரண்டடிகளில் விளக்குகின்றார். கம்பராமாயணத்தில் இக்கருத்து அடங்கிய அழகான செய்யுள் ஒன்று இருக்கின்றது. "திருமகள் நிலமகள் என்னும் உன்னிருதேவிகளில் நீ பின்னவளையே பெரிதும் பாராட்டுகின்றாய்" என்று விராதன் இராமனைத் துதிக்கின்ற செய்யுளாகிய அது பின்வருமாறு.—

அரவாகிச் சுமத்தியா லயிலெயிற்றி னேந்துதியால்
ஒருவாயின் விழுங்குதியா லோரடியா லொளித்தியால்
திருவான நிலமகளை யிஃதறிந்தாற் சீறுளோ
மருவாருந் துழாயலங்கன் மணிமார்பின் வைகுவாள்.

"அழகிய பூமிதேவியை நீ ஆதிசேஷனாகத் தலையில் வைத்துத் தாங்குகின்றாய், வராகமாக நீ உன் கூரிய கொம்பில் ஏந்தி அவளை முகத்தோடு சேர்த்துக் கொள்கின்றாய், பிரளயகாலத்தில் அவளை ஓரேவாயாக விழுங்குகின்றாய்; திரிவிக்கிரமனாக ஒரு பாதத்தில் மறைத்துவிடுகின்றாய். இப்படி நீ இவளைக் கொண்டாடுவதை, வாசனைபொருந்திய துளசிமாலை அசைகின்ற உன் மார்பில் தங்கியிருக்கும் திருமகள் அறிந்தால் உன்னோடு கோபித்து ஊடல் கொள்ளமாட்டாளோ" என்பது இச்செய்யுளின் பொருள்.

குறிப்பு —கம், என்னும் சொல்லிற்குப் பல அர்த்தங்கள் இருக்கின்றன. அவைகளில் ஆகாயம் என்பது

ஒன்று. கம், என்பது மகர மெய்யை ஈற்றில் உடைய சொல் ஆதலால் அது இல் என்னும் ஏழாம்வேற்றுமை உருபு ஏற்கும்போது 'அத்து' என்னும் சாரியை பெற்றது. காம், மரம் என்பனபோல் ம் என்னும் எழுத்தை இறுதியில் உடைய சொற்கள் எல்லாம், வேற்றுமை உருபோடு நேராகச் சேரமுடியாதென்றும் சாரியை வரவேண்டு மென்பதையும் முன் (வால்யூம் 1, பக்கம், ) விளக்கியிருக்கின்றோம். கம் + இல் என்பது இங்குக் கத்தில், என்று ஆயிற்று. மா, என்பதற்குப் பெரியஎன்பது பொருள். ஆதலால் மாகத்தில், என்பது 'பெரிய ஆகாயத்தில்' என அர்த்தமாயிற்று. மார்த்தாண்டன், என்பது சூரியனது பேர்களில் ஒன்று.

## இலக்கணம்.

சென்றவாரம் சொன்ன நான்கு வகைகளில் முதல் வகையை எடுத்துக் கொள்வோம்—அதாவது, நிலைமொழியிறுதியில் மெய்யெழுத்தும், வருமொழி முதலில் உயிரெழுத்தும் வருமானால் அவ்வெழுத்துக்கள் எவ்வாறு புணருமென்பது.

நிலைமொழியிறுதியில் நிற்பது எந்த மெய்யெழுத்தாயிருந்தாலும், வருமொழிமுதலில் வருவது எந்த உயிரெழுத்தானாலும் நிலைமொழியும் வருமொழியுஞ் சேர்ந்து ஆகின்ற தொடர்என்ன தொடரானாலும், அந்த இறுதிமெய்யும் இந்த முதல்உயிரும் பெரும்பாலும் ஒன்றாகச்சேர்ந்து உயிர்மெய் எழுத்தாகி விடும். இது பொதுவிதி.

உதாரணம்:—

காந்தள் + இரவலர் = காந்தளிரவலர். வேந்தன் + என = வேந்தனென. வேல் + ஒடித்தான் = வேலொடித்தான். அரசன் + அமைச்சர் = அரசனமைச்சர். கூழ் + இனிமை = கூழினிமை.

இப்படி நிலைமொழி யிறுதியிலுள்ள மெய்யும் வருமொழி முதலில்உள்ள உயிரும் ஒன்று சேர்ந்து உயிர்மெய்யாகிவிடுவதால், இந்தப்புணர்ச்சி விகாரப் புணர்ச்சி அன்று. தோன்றல் திரிதல் கெடுதல் ஆகிய மூன்றினில் ஏதாவதொன்று நேர்ந்தால்தானே விகாரமாகும். காண் + என்றான் = காணென்றான், என்று ஆகும்போது, ஒரு எழுத்தும் புதியதாகத் தோன்றவில்லை, ஒரு எழுத்தும் வேறு எழுத்தாகத் திரியவில்லை, ஒரு எழுத்தும் இல்லாதுபோய்க் கெடவுமில்லை. காண், என்னும் நிலைமொழி ஈற்றில் உள்ள ண் என்னும் மெய்யெழுத்து, ணெ என்று ஆயிற்றே, ஆகையால் திரிதல்விகாரமன்றோ என்று சந்தேகப்பட வேண்டாம். அப்படியே, என்றான், என்னும் வருமொழிமுதலில் இருந்த எ என்னும் உயிரெழுத்தைக் காணவில்லையே, ஆகையால் கெடுதல்விகாரமன்றோ என்றும் எண்ணவேண்டாம். அந்த எகர உயிர்தான், இந்த ணகர மெய்யின்மேல் ஏறி ணெ என்ற உயிர்மெய்க்கு ஒலியாயிருக்கின்றது. ணெ என்பதில், ண் என்னும் மெய்யினொலியும், எ என்னும் உயிரினொலியும் இரண்டும் இருக்கின்றன. ஒலியைத்தான் பார்க்கவேண்டும்; அவ்வொலியின் வடிவாகிய எழுத்தைப் பார்க்கப்படாது. ஆகையால் இவ்விதம்,மெய்யும் உயிரும் உயிர்மெய் யாகும்படி புணர்கின்ற புணர்ச்சியெல்லாம் இயல்புப் புணர்ச்சியேயன்றி விகாரப் புணர்ச்சி ஆகா.

# குலசேகரர்.

[569 வது பக்கத் தொடர்ச்சி]

## பேயாழ்வார்.

மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளு
வையந் தன்னொடுங் கூடுவ தில்லையான் [மிவ்
ஐயனே அரங்கா வென்றழைக் கின்றேன்
மையல் கொண்டொழிந் தேனென்றன் மாலுக்கே.

[மெய்யில் - உடலில் அல்லது மெய்யில்லாத - பொய்யாகிய - நிலையில்லாத; மையல் - பித்து]

### மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும்

உலக வாழ்க்கையானது உடலொடு விளங்கும் வாழ்க்கையே யாகும். இது நிலையிலாத வாழ்க்கையாதலின் பொய்யான வாழ்க்கையு மாகும். வாழாது மடிந்தொழிதல் மக்கள் இயல்பன்று: அறநெறியும்அன்று. உடலை வளர்த்தோர் உயிரை வளர்த்தோரே; உயிரை வளர்த்தோர் உயிரிடை ஒளியை வளர்த்தோரே.

அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு

என வள்ளுவரும் நெடிதுய்த்தல் வேண்டுமென வற்புறுத்துகின்றார். நெடியோனை அடைய நெடிதுய்த்தல் நேரிதேயாகும். ஆனால் நெடியோனையும் உயிரையும் மறந்து,உடலோடு வாழ்வதே வாழ்வுஎன நம்பினனாய் உயிர்கள் கடைப்பிடிக்கவேண்டிய உறுதிப்பொருள்களை மறந்து உண்பதும் உடுப்பதும் உறங்குவதுமாய் உலகவாழ்க்கையை நடத்துபவன் உயிரற்றவனேயாவன். ஒப்பற்றவனைஓவும்நாளே உணர்வழியும்நாள். உயிர் போகும்நாள். உயர்பாடு யேற்காதநாள். அவன் அடி யேத்துவா ரிகழ்ந்திட்டநாள் மறந்திட்டநாள், கெட்டநாள். ஆதலின் மற்றுப் பற்றெனக் கின்றிநின் றிருவடியினை மனத்தே நினைக்கபெற்ற நாள்தான் உயிரோடு பிறந்த நாளாகும். எனவே, உடலோடு கூடிய வாழ்க்கை ஒப்பற்றவனை உவந்தடைவதற்கு ஒரு வழியேயாகும். அது நாம் போகும் ஊர் அன்று; முடிந்தமுடிபன்று. அதுவே மெய்ப்பொருள் அன்று. வழிக்கும் ஊர்க்கும் வேற்றுமையறியாது மயங்குதல் ஆகாது. என்றும் நிலையாய்இருப்போம் என எண்ணி இன்பம்நுகர்ந் தொழுகுவதால் நமக்கும் பயனில்லை; பிறர்க்கும் பயனில்லை. உண்மையும் இன்பமும் அறிவும் அன்றி உலகத்துள்ளன வேறெவை? அவற்றையடைந்து உய்யாதபோது மனவுணர்வுடைய மக்கள், மாக்களாய் மாவாய்ப் பறவையாய்ப் பாம்பாய்ப் புழுவாய் மரமாய்ப் புல்லாய்க் கல்லாய்க் கழிகின்றனர். உண்மையறிவின்ப வடிவினரே கடவுள்.



அவரே உலகிற்கும் உயிர்க்கும் ஒரு முடிவாவர். உலகமும் உயிரும் அவரது உடலேயாகும். எவற்றிற்கும் உள்ளே ஒளியாகி ஒளிர்பவரே ஒப்பற்ற தனிமுதலாவர். அவரே மெய்ப்பொருள். அவரை நினைந்ததே மெய்யான வாழ்க்கை; அதனையே மெய்யெனக் கொள்ளுதல் வேண்டும். இறந்தாரைக் கொட்டுமுழக்கோடு எங்கும் பெருவழக்காய் உலகினர் எல்லாம் அறியத் தூக்கிச்செல்வதை எந்நாளும் பார்த்திருந்தும், அதனை எண்ணாது இறுமாந்து நின்று எவர்க்கும் இனியன செய்யாது மாக்களாய் இழிந்த இழுதையாரோடு, மெய்யாம் இறைவனைக்கண்டு மெய் வாழ்வுவாழ்வார் கூடிக் குலாவுவது எங்ஙனம் இயலும். தெவிட்டாத தெள்ளமுதம் உண்டார் எட்டிக்காயை எடுத்துப் பார்ப்பரோ?

### வையந்தன்னொடும்

இத்தகைய இழுதையாரின் இழிவுகள் இருத்தற்கிடமாயது இவ்வுலகம். வைத்தற்கிடமாதலின் வையமெனப்பெயர்பெற்ற உலகம், மாலவனை ஒளித்துவைத்து மறம் வைத்தற்கே இடமான வையமாகும்; மறநிலையமாகும்.!!

### கூடுவதில்லையான்

கூடுதல் இல்லை என்றால் உலகினரை விட்டோடிப் போதலோ? அவர்களை வழிப்படுத்த வேண்டாமோ? நெருப்புப்பட்டவிடத்தில் அதனை விலக்கத்தோன்றாதபோது தன்னைக் கொண்டு தான் தப்புவாரைப்போலத் தன்னைக்கொண்டு தப்புவார் ஒரு சிலர். எல்லோரையும் உய்யச் செய்வார் ஒரு சிலர். சாக்கிய நாயனார்போலத் தம்வரையில் உய்ந்துபோவாரே முன்னவர்; திருநாவுக்கரையர்போல எல்லோரையும் அன்புநெறியால் அறிவுநெறிக்கண் செலுத்துவோரே பின்னவர். பின்னவரே, ஆழ்வார்கள் என்றும் ஆளுடையார் என்றும் புகழப்படும் பெரியோர். எனவே குலசேகரர் முன்னணியில் சேராது பின்னணியில் சேர்ந்தாராதலின் தன்வரையில் தப்பி ஓடுகின்றவர் அல்லர். கூடுவதாவது அவர்கள் ஒழுக்கத்தை மேற்கொண்டு அவர்களோடு கூடிக் குலாவுவதே யாகும். பிறரை வழிப்படுத்துவதை அடியாரின் சிறப்பியல்பாகக் கூறிய இவரும், 'பாதமாமலர் சூடும் பத்தியிலாத பாவிகள் உய்ந்திடத் தீதில் நன்னெறிகாட்டி' எங்குந் திரிகின்றவரே யாவர். ஆனால், தாமரை இலைமேலே முத்தென நின்று கதிரவன் ஒளியில் பேரின்பப் பேரொளியின் பெருந்துளிபோல விளங்கும் தண்ணீர்த்துளி இலையில் ஒட்டாது தயங்குதல்போல உலகினரிடையே உலகின் முன்னேற்றத்தைக் கருதிப் பெரியோர் வாழ்ந்தாலும்,உலகினர் செய்கையில்சேராமலும் அவரோடு கைகோத்துக் கலந்து களிக்காதும் கூடிக் குலாவிக் குதிக்காதும் தனிநிற்பர். கூடாமை ஒன்றேகூறினால் உள்ளம் நம்மோடுகூடாது. வேறொன்றினைக் கூடுவதனையும் கூறுதல்வேண்டும். அதனைப் பின்னிரண்டடிகளால் ஓதுகின்றார் ஆழ்வார்.

### ஐயனே.

மெய்யென விளங்கும் பொருளினையே மெய்யெனக்கொண்டு மெய்வாழ்வு வாழ்கின்றேன். உலகத்திற் பிறந்தார் உலகத்திற்கு ஒரு முதல்வனான ஐயனை (தலைவனை) அறிய வேண்டாமா? அறிய அறிவுகொளுத்திய ஐயனை (ஆரியனை - குருவை) வாழ்த்தி வணங்கவேண்டாமா? பொருளை எல்லாம் அழித்தும் கொடியபிள்ளையாய்க் கொலைப்பழி பூண்டோனும் நல்லவனாய் நல்வழியிற் புகுந்து வீடுசேர்ந்து தன்வழி நில்லானோ, மிகுந்த பொருளைக் கொள்ளானோ என்று எதிர்பார்த்து அவன் வந்தால் தன்னுடன் எந்நாளும் இருந்த நல்லபிள்ளையையும் மறந்து வந்தவனுக்கே பெருவிருந்துசெய்து களிக்கும் தந்தையினும் சிறந்த தந்தையாய்த் தண்ணளியோடு விளங்கி நம்வரவு பார்த்திருக்கும் ஐயனை (தந்தை) அடைய வேண்டாமா? நாம் அடைதற்கு ஏற்றவழியை இராமனாய் நடந்து காட்டியும், கண்ணனாய் எடுத்துக் காட்டியும், நம்முன் சென்ற ஐயனை (நம்முன்) நண்ணி அன்புவடிவாக வேண்டாமா? எளிதில் எல்லோரும் கண்டு இன்பமுறுமாறு எம்மை நோக்கி இவ்வுலகிலே இத்தமிழ் நாட்டில் திருவரங்கத்தே புகுந்த திருவருளை நினைக்கவேண்டாமா?

### அரங்கா

பயிரிடையேபோய்க் குடில்கட்டி வாழும் குடியானவனைப்போலன்றோ இறைவன் எம்மிடைவந்து திருக்கோயில்கொண் டெழுந்தருளுகின்றார். குழவி உறங்கும் தொட்டிலினடியிற் படுத்திருந்து பாணினைந்தூட்டும் தாயினும் சாலப்பரிந்து ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா இன்பமாய தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிகின்ற அரங்கன் அருளை நினைக்கவேண்டாமா?

### என்றழைக்கின்றேன்

நினைத்தபோது என்னையும் மறந்து, அப்பண்புகள் மிக்க அப்பெரியானை அந்தப் பெயர்களை கொண்டு, இன்பத்திற்குப் போக்குவீடாக என்றும் கூப்பிடா நிற்கின்றேன். ஐயன் நிலையையும் அரங்கன் நிலையையும் நினைந்தால் நாம் ஆம்படி அஃதேயன்றோ?

### என்றன் மாலுக்கே

எனக்குஇங்ஙனம் எல்லாம்அருள்செய்து பின்னின்று காத்திருத்தலைப் பொறுதவனாய் என்பித்தேபிடித்து மாலானான் என்றன் மால். அவன் எனக்குப் பித்தேறின படியைக்கண்டு நானும் அவனுக்கு பித்தனானேன்.

### மையல் கொண்டொழிந்தேன்

பித்தனாய் ஒன்றாகாது பிரிந்துநிற்க முடியுமோ? உடையே ஊணே பெண்ணே பிறவே எனக் கனவிலும் கரைந்துருகும் உலகினரைப்போல அன்பே அருளே அறிவே மெய்யே எனக் கனவிலும் அவன் நினைவாகி வாய்வெருவா நிற்கின்றேன். இந்நிலை நின்றேன் உலகினரோடு கூடிக்குலாவுவ தெங்ஙனம். அமுதினை உண்டார் அங்கணநீர் உண்பரோ! அவன் வடிவும் அவன்செயலும் அவன் பண்பும் அவன் அறிவும் குடிபுகுந்து நிரம்பிய மனத்திலே உலகினர் ஒழுக்கமும் இழுக்கும், உடையும் நடையும் புகுதற்கு எவ்வளவு இடமும் இல்லையே ! அவனே தலைவன்; அவனே தந்தை; அவனே நண்பன்; அவனே அன்பன். பின் னெதுவேண்டிப் பிறிதோரிடம் புகுவேன் ?

# அப்பர்

## 5. அப்பர் கவித்திறம்.

### 1. கவிகளின் பகுதிகளும், அவற்றுள் அப்பர் உரிமையும்.

[ 571 வது பக்கத் தொடர்ச்சி ]

சித்திரம்.

சித்திரகவியின் இலக்கணம் யாதௌன்பதற்கு நம திலக்கணநூல்களிற் சூத்திரம் யாவரும் கொடுத்திலர். தண்டியாசிரியர் மடக்கலங்காரங்கள் கூறிய பின்னர்,

"கோமூத் திரியே கூட சதுக்க
மாலை மாற்றே யெழுத்து வருத்தன
நாக பந்தம் வினாவுத் தரமே
காதை கரப்பே கரந்துறைச் செய்யுள்
சக்கரஞ் சுழிகுளஞ் சருப்பதோ பத்திர
மக்கரச் சுதகமு மவற்றின் பால"

என்று மடக்கின்பாற் படுகின்ற கோமூத்திரி முதலிய சித்திர கவிகளை மொழிந்தனர். உரையிற் கோடலாய்ப் பதுமபந்தம் முரசபந்தம் முதலியனவும் நாம் கொள்ளலாகும். இவற்றிற்குச் சமஷ்டியிலும் வியஷ்டியிலும் இலக்கணம் எவருஞ் செய்திலர் வீரசோழியத்தை நோக்குவோமாயின், அலங்காரப் படலத்தில்

ஆதியு மீறு மிடையுமடி யொன்றிலே மடக்கு
மோதிய பாதங்க ளொன்றினு மாமொரு பாதமுற்றுந்
தீதில லாமை மடக்கலு முன்றி தெரிந்தவற்றைக்
கோதில லாமை விகற்பத்தினி லறிகோல்வளையே.(37)

தந்திரவுத்தி குணமத மேயுரை தர்க்கந்தன்னில்
வந்திய லெண்கோண் முதலாயுளமாலை மாற்றுமுன்னு
வந்தியல் சித்திர மென்றின்னவு வலங்காரமென்றே
தந்தியலச்சிலர் சொன்னாவற்றையுஞ் சார்ந்தறியே. (38)

ஏறிய மாலைமாற் றேசக் கரமினத் தலெழுத்தால்
கூறிய பாட்டு வினாவுத் தரமேக பாதமன்றித்
தேறிய காதைக் கரப்புச் சுழிகுளஞ் சித்திரப்பா
வீறியல் கோமூத் திரியும் பிறவும் விரித்துரையே(39)

என்னும் மூன்று சூத்திரங்களை காணப்படுகின்றன. தொல்காப்பியத்தைத் தழுவி யெழுதிய இலக்கண விளக்கமும் சித்திரக்கவியின் இலக்கணம் வகுத்துக் காட்டவில்லை. அணியியலில் சொல்லணியாகிய மடக்கின் வழிப்படுவது சித்திரமென்றார் வைத்தியநாத தேசிகர்:—

சொல்லணி யென்பது சொல்லுங் காலை
மடக்கு மதன்வழிப் படூஉம் சித்திரமுமென
நடக்கு மென்மனார் நபனுணர்ந் தோரே
இலக்கணவிளக்கம் 684

அதுவே:—

கோமூத் திரியே கூட சதுக்க
மாலை மாற்றே மாத்திரைச் சுருக்க
மாத்திரை வருத்தன மெழுத்து வருத்தன
மொற்றுப் பெயர்த்தல் வினாவுத் தரமே
நாக பந்த முரச பந்தம்
திரிபாதி திரிபங்கி பிறிதுபடு பாட்டுக்
காதை கரப்பே கரந்துறைச் செய்யுள்
சக்கரஞ் சுழிகுளஞ் சருப்பதோ பத்திர
மக்கரச் சுதக நிரோட்ட மென்ன

முறைபெற வகுத்த விறைக்கவி யிருபது
மறிவுறக் கிளந்த வவற்றின் பால ஷை-690)

என்றார். ஆகையால் அப்பர் தேவாரத்தில் மடக்குகட்டி உளவோ, அதன்பாற் படும் சித்திரங்களுளவோ என்பதை ஆராய்வோம்:—

தண்டியாசிரியர் மடக்கின் இலக்கணங் கூறுங்காலை
"எழுத்தின் கூட்டம் இடைபிறி தின்றியும்
பெயர்த்தும் வேறுபொருடரின்
மடக்கெனும் பெயர்த்தே" என்றவர்

அதுதான்,

ஓரடி முதலா நான்கடி காறுஞ்
சேரு மென்ப தெளிந்திசி னோரே" என்றார்

அப்பர் தேவாரத்தில் எவ்வித மடக்கு * உதாரணமும் காணலாகும். அடிமுதன் மடக்கிலுள்ள பலவகை மடக்குக் காண்க:—

(i) முதலடி முதன் மடக்கு:— (உ - ம்)

ஊழியா ரூழிதோறு முலகினுக் கொருவராகி
பாழியார் பாவந்தீர்க்கும் பராபர பரமதாய
ஆழியா னன்னத்தானு மன்றவர்க் களப்பரிய
பாழியார் பாவியேத்தும் பழனத்தெம் பரமனாரே
திருப்பழனம்-திருநேரிசை 5.

(ii) இரண்டாமடி முதல்மடக்கு:—(உ - ம்)

ஓதினார் வேதம் வாயால் ஒளிநிலாவெறிக்கும் சென்னிப்
பூதனார் பூதஞ்சூழ்ந்த புலியுரி யதளனார் தம்
நாதனார் தில்லைதன்னு ளவின்றசிற் றம்பலத்தே
காதில்வெண் குழைகடாழக் கனலெரி யாடுமாறே.
கோயிற்றிருநேரிசை 5.

(iii) மூன்றாமடி முதல்மடக்கு:— (உ - ம்)

மாயனாய் மாலனாகி மலரவனாகி மண்ணாய்த்
தேயமாய்த் திசையெட்டாகித் தீர்த்தமாய்த் திரிதர்கின்ற
காயமாய்க் காயத்துள்ளார் காஞ்சிமா நகர்தனுள்ளார்
வேயமென் றோளிபாக ரிலங்குமேற் றளியனாரே
திருக்காஞ்சி மேற்றளி - திருநேரிசை 7.

(iv) ஈற்றடி முதல் மடக்கு:— (உ - ம்)

மண்ணினை யுண்டமாயன்
தன்னையோர் பாகங்கொண்டார்
பண்ணினைப் பாடியாடும்
பத்தர்கள் சித்தங்கொண்டார்
கண்ணினை மூன்றுங்கொண்டார்
காஞ்சிமா நகர்தன்னுள்ளார்
எண்ணினை யென்னவைத்தா
ரியங்குமேற் றளியனாரே:
திருக்காஞ்சி மேற்றளி—திருநேரிசை 7.

(v) முதலடியும், இரண்டாமடியு முதன்மடக்கு:(உ-ம்)

கீதராய்க் கீதங்கேட்டுக் கின்னரந் தன்னைவைத்தார்
வேதராய் வேதமோதி விளங்கிய சோதிவைத்தார்

* இங்குச்சில மடக்குகளின் உதாரணமே காட்டப்பட்டன-கூறாது விட்டன பல நான்காந்திருமுறையிற் பெரும்பாலும் காணலாகும்.



ஏதராய் நட்டமாடி யிட்டமாய்க் கங்கையோடு
மாதையோர் பாகம்வைத்தார் மாமறைக் காடனாரே
திருமறைக்காடு-திருநேரிசை 7.

(VI) முதலடியும், மூன்றாமடியு முதன்மடக்கு:-(உ-ம்)

விண்ணினார் விண்ணின்மிக்கார் வேதங்கள் விரும்பி
பண்ணினார் கின்னரங்கள் பத்தர்கள் பாடியாடக் [யோதப்
கண்ணினார் கண்ணினுள்ளே சோதியாய் நின்றவெந்தை
மண்ணினார் வலங்கொண்டேத்து மாமறைக் காடனாரே.
திருமறைக்காடு-திருநேரிசை 5.

(VII) முதலடியும் ஈற்றடியு முதன்மடக்கு:— (உ-ம்)

தெருளுமா தெருளமாட்டேன்
தீவினைச் சுற்றமென்னும்
பொருளுளே யழுந்திநாளும்
போவதோர் நெறியுங்காணேன்
இருளுமா மணிகண்டாநின்
னிணையடி யிரண்டுங்காண்பான்
அருளுமா றருளவேண்டு
மதிகைவீ ரட்டனாரே.
திருவதிகை வீரட்டானம்—திருநேரிசை 4.

(VIII) மூன்றாமடியும், ஈற்றடியுமுதன்மடக்கு:(உ-ம்)

கருவினை மருவும்கங்கை தங்கிய சடையனெங்கள்
அருவினை யகலநல்கு மண்ணலை யமரர்போற்றுந்
திருவினைத் திருவேகம்பஞ் செப்பிட வுறையவல்ல
உருவினை யுருகியாங்கே யுள்ளத்தா லுகக்கின்றேனே.
திருவேகம்பம்-திருநேரிசை 6.

(IX) இரண்டாமடியும் மூன்றாமடியு முதன் மடக்கு:— (உ -ம்)

முந்தையார் முந்தியுள்ளார் மூவர்க்கு முதல்வரானார்
சந்தியார் சந்தியுள்ளார் தவநெறி தரித்துநின்றார்
சிந்தையார் சிந்தையுள்ளார் சிவனெறி யனைத்துமானார்
எந்தையா ரெம்பிரானா ரிடைமரு திடங்கொண்டாரே
திருவிடைமருது - திருநேரிசை 2.

(X) நாலடி முதன் மடக்கு:—(உ - ம்)

மூவகை மூவர்போலும் முற்றுமா நெற்றிக்கண்ணர்
நாவகை நாவர்போலும் நான்மறை ஞானமெல்லாம்
ஆவகை யாவர்போலு மாதிரை நாளர்போலுந்
தேவர்கள் தேவர்போலுந் திருப்பயற் றூரனாரே.
திருப்பயற்றூர்-திருநேரிசை 5.

இத்தகைய மடக்குகளுடன் அலங்கார இலக்கணத்தில் உரையிற்கோட லென்னும் உத்தியால் காட்டக்கூடிய மடக்குகள் அப்பர் தேவாரத்தில் பலவுள. அவையாவன:—

(XI) முதன்மூன்றடிக்கு ஒருசோல்மடக்கு:-(உ-ம்)

கிடந்தபாம் பருகுகண் டரிவை பேதுறக்
கிடந்தபாம் பவளையோர் மயிலென் றையுறக்
கிடந்தநீர்ச் சடைமிசைப் பிறையு மேங்கவே
கிடந்துதா னகுதலைக் கெடில வாணரே
திருக்கெடிலவாணர்-பண்-காந்தாரம் 8.

மூன்றாமடி யொழிய ஏனையவடி ஒரு சொல்மடக்கு:—(உ - ம்)

ஒற்றி யூரு மொளிமதி பாம்பினை
யொற்றி யூருமப் பாம்பு மதனையே
யொற்றி யூர வொருசடை வைத்தவ
னொற்றி யூர்தொழ நம்வினை யோயுமே
திருவொற்றியூர்-திருக்குறுந்தொகை 1.

(1) நாலடிமுதற்கு ஒரு சோல்மடக்கு:—(உ - ம்)

அஞ்சனை கணையினானை யழலுற வன்றநோக்கி
அஞ்சனை குழலினாளை யமுதமா வணைந்துநக்கு
அஞ்சனை யஞ்சு மாடி யாடர வாட்டுவார்தாம்
அஞ்சனை வேலியாரூ ராதரித் திடங்கொண்டாரே
திருவாரூர்-திருநேரிசை 7

ஆயிரந் திங்கள்மொய்த்த வலைகட லமுதம்வாங்கி
யாயிர மசுரர்வாழு மணிமதின் மூன்றும்வேவ
வாயிரந் தோளுமட்டித் தாடிய வசைவுதீர
வாயிர மடியும்வைத்த வடிகளா ரூரனாரே
—ஷை-10.

அஞ்சினா லியற்றப்பட்ட வாக்கைபெற் றதனுள்வாழும்
அஞ்சினா லடர்க்கப்பட்டிங் குழிதரு மாதனேனை
அஞ்சினா லுய்க்கும்வண்ணங் காட்டினாய்க் கச்சம்தீர்ந்தேன்
அஞ்சினாற் பொலிந்தசென்னி யதிகைவீ ரட்டனாரே †
திருவதிகைத் திருநேரிசை 5

(2) செய்யுள் முற்றும் முதற்சோல் மடக்கு:-(உ-ம்)

ஆயிரந் தாமரை போலு மாயிரஞ் சேவடி யானு
மாயிரம் பொன்வரை போலு மாயிரம் தோளுடையா
ஆயிரம் ஞாயிறு போலு மாயிர நீண்முடி யானு[னும்
மாயிரம் பேருகந் தானு மாரூ ரமர்ந்தவம் மானே
திருவாரூர்-பண்-காந்தாரம் 8.

நாலடி முதற்கு ஒருசொற்றொடர் மடக்கு:— (உ-ம்)

தன்னிற் றன்னை யறியுந் தலைமகன்
தன்னிற் றன்னை யறியிற் றலைப்படும்
தன்னிற் றன்னை யறிவில ரையிடில்
தன்னிற் றன்னையுஞ் சார்தற் கரியனே
சித்தத்தொகை-திருக்குறுந்தொகை 29

(3) முதலடிக்கும் நான்காமடி மடக்கு:— (உ - ம்) —திருவங்கமாலை.

தலையே நீவணங்காய் - தலை
மாலை தலைக்கணிந்து
தலையா லேபலி தேருந் தலைவனைத்
தலையே நீவ ணங்காய்!

* * * *

தேடிக் கண்டுகொண்டேன் - திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை யென்னுளே
தேடிக் கண்டுகொண்டேன்.

(4) செய்யுள் முற்றும் முதற்சொற்றொடர் மடக்கு:— (உ - ம்)

விடந்தீர்த்த பதிகம், தனிக்குறுந்தொகை ("ஒன்று வெண்பிறைக் கண்ணியோர் கோவணம்" etc)

(5) பதிகமுற்றும் ஒரு சொல் மடக்கு:—

கொப்புளித்த திருநேரிசை, கோயிற்றிருநேரிசை. முதலியன:—

இரும்புகொப் புளித்தயானை யீருரி போர்த்த வீசன்
கரும்புகொப் புளித்தவின்சொல் காரிகை பாகமாகச்
சுரும்புகொப் புளித்தகங்கைத் துவலைநீர் சடையிலேற்ற
அரும்புகொப் புளித்தசென்னி யதிகைவீ ரட்டனாரே

தொண்டகொப் புளித்தசெவ்வாய்த் துடியிடைப் பரவை [யல்குல்
கொண்டைகொப் புளித்தகோதைக் கோல்வளைப் பாகமாக

† இதைக்கண்டே கம்பரும் 'அஞ்சிலேயொன்றுபெற்றான்' என்னும் அநுமான் துதி பாடினார்போலும்?

சில பந்தங்கள் அப்பர் செய்யுட்களிற் காணப்படுகின்றன. இவை பின்னர் விளக்கப்படும்.

வண்டுகொப் புளித்ததீந்தேன் வரிக்கயல் பருகிமாந்தக்
கெண்டைகொப் புளித்ததெண்ணீர்க் கெடிலவீ ரட்டனாரே
செஞ்சடைக்கற்றை முற்றத்திளநிலா எறிக்கும் சென்னி
நஞ்சடை கண்டனாரைக் காணலா நறவநாறு
மஞ்சடை சோலைத்தில்லை மல்குசிற் றம்பலத்தே
துஞ்சடை யிருள்கிழியத் துளங்கெரி யாடுமாறே. (1)

ஏறனா ரேறுதம்பா விளநிலா வெறிக்கும்சென்னி
யாறனா ராறுசூடி யாயிழை யாளோர்பாகர்
நாறுபூஞ் சோலைத்தில்லை நவின்றசிற் றம்பலத்தே
நீறுமெய் பூசிநின்று நீண்டெரி யாடுமாறே (2)

அடைவுத் திருத்தாண்டகச் செய்யுட்களையும் நோக்குக.

இன்னும் பலவகை மடக்குகள் அப்பர் தேவாரத்திற் காணலாகும். கோமூத்திரி முதலிய சித்திரக்கவிகள் உண்டோ இலவோ இத்தேவாரத்தி லென்பது திண்ணமாய்க் கூறலாகாது. எழுத்தலங்காரமாய்ப் பன்னிரண்டு உயிரும், பதினெண் மெய்யுமாம் ஆதி பெற்ற சித்தத்தொகை-திருக்குறுந்தொகை ‡ஒருவித சித்திர கவியேயாம். சொற்சித்திர மாத்திரமன்றிப் பொருட் சித்திரங்கள் அப்பர் தேவாரத்தில் விளங்குவதைக் காண்க:—

நிலையிலா வூர்மூன்றொன்ற நெருப்பரி காற்றம்பாகச்
சிலையுநா ணதுவுநாகங் கொண்டவர் தேவர்தங்க
டலையினாற் றரித்தவெண்புந் தலைமயிர் வடமும்பூண்ட
விலையிலா வேடர்வீழி மிழலையுள் விகிர்தனாரே
திருவீழிமிழலை-திருநேரிசை 4.

நிலையிலாவூர்—ஒன்ற
நெருப்பரி—காற்று
சிலை—நாகம் }
நாண்—நாகம் }
நாகம் கொண்டவர்—தேவர்

இத்தொடர்கள் பொருளணியை நோக்குக.

‡ இதில் "லகரத்தை" கடைச்செய்யுளில் வைத்தது இலங்கை மன்னனைப்பற்றிய செய்யுள் பதிகமுடிவாதலால்.

இலங்கை மன்னனை யீரைந்து பத்துமன்
றலங்களோ டுடனே செல வூன்றிய
நலங்கொள் சேவடி நாடொறு நாடொறும்
வலங்கொண் டேத்துவார் வானுல காள்வரே.

றகர னகரங்கள் இதற்குமுன்னுள்ள 29-வது செய்யுளிற் காண்க:—
"தன்னிற் றன்னை யறியுந் தலைமகன்" என்னும் செய்யுள்.

# சிந்தாமணி நீதிச் செய்யுள்

நற்றமிழ் தெரிந்த பெருங்காப்பியங்கள் ஐந்தினுள் சீவகசிந்தாமணி யென்பதூஉ மொன்றாம். இதன் ஆசிரியர் திருத்தக்கரென்ற ஜைன முனிவராவர். இப்பெருங் காப்பியத்தின் றலைவன் சீவகன் என்பானோர் அரசன். இக்காப்பியத்தலைவன் றோன்றியபோழ்திற் "சிந்தாமணி" எனச் சீவகன் நற்றாய் அழைத்தமையின் இக் காப்பியத்திற்குமப் பெயரே ஆயிற்று. இதனுள் பன்னயங்கெழுமிய நன்னயப் பாக்கள் பலவாம். பொருணயத்தோடு சொன்னயமுங்கொண்டு பொலிவுற்ற பாக்களான் பிறங்குமிப் பெருங்காப்பியத்துணின்று நீதிபொதிந்த செய்யுட்களைத் தொகுத்துக் கூறலே இக்கட்டுரையின் நோக்கம். எனவே இத்தொகுப்பினுக்கு நீண்டதோர் முன்னுரை வேண்டன்மையின் மேற்செல்லுதும்.

கண்வலைக் காமுக ரென்னு மாபடுத்
தொண்ணிதித் தசைதழீஇ யுடலம் விட்டிடும்
பெண்வலைப் படாதவர் பீடி னோங்கிய
வண்ணலங் கடிநக ரமைதி செப்புவாம்.

[கண்ணாகிய வலைகொண்டு காமுகரென்ற விலங்கினைத் தம்மாட்டுஇசைத்து ஒள்ளிய நிதியாகிய தசையைத் தழுவி உடலை விட்டுவிடும் மாதாது வலையினகத்துச் சிக்காத காசறு துறவிகளின் தவப்பயனைப் போன்ற செல்வம் ஓங்கிய இராசமாபுரத்தினது அமைதியினைக் கூறுவாம்]

நகர்வளம் கூறும் பாவாகும் இது. இஃது அந்நகரின் செல்வச் சிறப்புக் கூறுவதாயிற்று. காசறுதுறவிகளின் கடுந்தவத்தினுக் குற்ற பயன்போலச்செல்வம் வளர்ந்த தென்கின்றார். நேரிய முறையில் பொருள் ஈட்டுவார்க்கே பொருள் வளருந்தன்மைய தாகும். அந்நாட்டினர்க்குச் செல்வ மோங்குதற்குக் காரணம்யாது?

களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்

[களவினா னுண்டாய செல்வமானது ஓங்குவதுபோலத் தோன்றி அவ்வளவினுக் கதிகமாகக் கெடும்]

என வள்ளுவர் கூறினாரன்றே! ஆயின் ஈண்டு உவமையைக்கொண்டு ஒருவாறு தெளிதலாகும். காசறு துறவிகளுக்கு அவர் பெருந்தவத்தினாலேயே பயன் எய்துவதாகும். அங்ஙனே இராசமாபுரத்து மக்கள் தம் முயற்சியான் பெரும்பொருள் ஈட்டியிருக்கலாம். அது நிலைத்தற்கு அந்நாட்டாரது நெறிமுறையே காரணமெனப தோர்தற் பாற்று.

காவல குறிப்பன் றேனுங்
கருமமீ தருளிக் கேண்மோ
நாவலர் சொற்கொண் டார்க்கு
நன்கலாற் றீங்கு வாரா
பூவலர் கொடிய னார்கட்
போகமே கழுமி மேலும்
பாவமும் பழிப்பு முற்றார்
பற்பலர் கேளி தென்றான்

[காவலனே! திருவுள்ள மன்றாயினும் அருள்செய்து கேண்மோ. அமைச்சர்களுடைய சொல்லைக் கேட்பார்க்கு நன்மையலாது தீமை வாரா. பூவலர்ந்த கொடியை யொத்தாரது போகத்தையே பெரிதெனக் கருதிப் பாவத்தையும் பழியையும் எய்தினவர் பலர் ஆவர். இதனைக் கேள் என்றான்.]

இப்பா, எப்பாரும் ஏத்தும் ஒப்பாரிலாத சச்சந்தன் எனும் அரசன் விதையதேசத்து வேந்தனும் ஸ்ரீதத்தன் மகள் விசையையை வரைந்து அவளோடு கூடி எக்காலத்தும் இன்பந் துய்ப்பான் வேண்டி மந்திரி யொருவனைக் கூஉய் "இந் நாட்டினைக் காத்தி'



என விதித்தபோழ்து நிமித்தகன் எனு நல்லமைச்சன் நவின்றதாகும்.

அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்"

என்ற வள்ளுவர் விதியினுக்கு நிமித்தகன் இலக்கியமாகின்றான். எவ்வாறு? "அரசனே! திருவுள்ளமன்றேனும் யான்கூறுதலைக் கேட்டருளவேண்டு"மென்று நிமித்தகன் கூறுகின்றான். அவ்வாறு நிமித்தகன்நவிறற்குக் காரணம் யாதுகொலோ? பெண்ணினலத்தை விரும்பி யோரரசன் அரசினைத் துறத்தலென்பது எத்தகைய இழிதகைமை? இல்லாளொடு இயைந்து இன்புறுதலே அறத்திற்கு அரண் செய்வதாகும் என்று அரசன் கருதுவானாயின் அதுபெரும் பிழையென்று நிமித்தகன் உன்னுகின்றான். அரசினைத் தாங்கி இல்லாளோடு இன்புறுதல் இயலாதோ? நிமித்தகன், பூவலர்ந்த கொடியையொத்தாரது தொடர்பே வேண்டற்பால தன்றெனக் கூறுகின்றானா எனக் கூர்ந்து நோக்கல்வேண்டும். மற்றைய அறங்களினும் அன்னார் போகமே சால்புடைத் தென்றல் சாலாதன்றே! தன் கூற்றினை வலியுறுத்தற்கு நிமித்தகன் பல சரிதங்களை நிகழ்த்துகின்றான். என்ன கூறியும் அரசன் உடன்படாமையின் நிமித்தகன் இறுதியாகக் கூறுகின்றான்.

மூரித்தேந் தாரி னாய்நீ
முனியினு முறுதி நோக்கிப்
பாரித்தேன் றரும நுண்ணூல்
வழக்கிது வாதல் கண்டே
வேரித்தேங் கோதை மாதர்
விருந்தினக் காக வின்பம்
பூரித்தேந் திளைய கொங்கை
புணர்கயான் போவ லென்றான்

[தாரையுடையவனே! அறநூல்வழக்கை உறுதிபெற அரசனுக்கு உறைத்தல் அமைச்சனது கடனாகலின் யான் இவ்வளவும் இயம்பினேன். (அதனைநீ கேட்டிலையாகலின்)இனி நீ தேன்பொருந்திய மாலையை யணிந்த மாதரை விருந்தாகக்கொண்டு அவர்களது கொங்கையைப் புணர்ந்து இன்புறுக, யான் போவல், என்றான்.]

இந்நிமித்தகன் "அறிகொன்றறியான்" என்ற குறட்கு இலக்காகின்றான் என்று முன்னர்க் கூறியகூற்று வலிபெறல் காண்க. "நீபுணர்க யான்போவல்" எனக்கூறினான் நிமித்தகன். நீ மாதரோடு புணர்க யான் அதனை விரும்பாது தவஞ்செய்கின்றேன், என்ற குறிப்பு எஞ்சிநிற்றல் காண்க. நிமித்தகன் துறவிடத்துப்போதற்கு காரணம் யாது? முதலாவதாக, அரசன் தன்சொற்கு உட்படானாயிற்று. ஆகவே அரசன் தன் அரசை வேறொருவனிடத்து ஒப்புவித்தான். எனவே அமைச்சனது கடன் நிறைவேறாமை பெற்றாம். எனவே தான் வேறொருவனுக்கும் அமைச்சனாயிருப்பதான் அவ்வரசன் அடையும்பயன் யாதென உணர்ந்தான் போலும்!

189065

# மாறன் பாப் பாவினம்.

[570-வது பக்கத் தொடர்ச்சி]

## பரிபாடல்

நேரிசையாசிரியம்.

விழுமிய திறத்துரை வெளிறிலா மேதைகூர்த்[ரினை
தொழுகவைத் துடனிகந் தொரீஇயவொண் சுட
யிதுபொரு ளெனத்தெரித் தீறினுண் ணுரவுடைப்
புதுமொழி முகத்தகப் படுத்திய புலமைசால்
காமரு ஞானமுங் காட்சியுங் கருணையுந்
தாமொரு தலையாத் தனியுருப் புணர்ந்த
வெங்கோன் றிருமகிழ் மார்பின னிமையவர்
தங்கோன் றமிழுமிலச் சந்தனப் பொதும்பர்க்
கொருதனி விளக்கம தாயுருத் துவந்த
திருவமர் மாணெழிற் றேசுடை மடவோய்
நுமர்புரந் தனராய் நோக்கம் சீறார்க்
கெமர்புரந் தனரா யேமுறு பேஎநர்
தன்னுயிர்க் கூறு தருபட ருறீஇப்பிற
மன்னுயிர்க் குறுகண் மனக்கொளார் மனத்தினைப்
பொருளினுட் பொருளெனப் புனிதநூல் குறித்த
வருள்கெழு தகைத்தா யகலா தண்ணிய
தெவ்வள வணித்தெனு மிருநில
மவ்வள வெனுநிலை மையினணி மைத்து.

இது, பதினெட்டடியான்வந்த, நேரிசையாசிரியம்.
அஃதான்று, இது ஒழியசை.
(தனிச்சொல் லெண்பது மிது)

ஆசிரியம்.

காந்தியும் வாய்மையுங் கருணையுங் கவிகையும்
வாய்ந்தநன் குலனு மறைமுத லியவுரை
தோய்ந்தறி வுடைமையுந் தூய்மையுமொழுக்கமுஞ்
சாந்தியு நிறையும் பொறையுஞ் சால்புமென்
றாய்ந்துள விவற்றினொன் றமைதிய திலவாய்
மாந்தரென் றிடுகுறி யுடைமட மையரா
நரரையுந் துதியா நன்னிலை நிலைஇயப்
பரனுடை பாராட் டியமதிப் பாவலர்
வரனுடை நாவு மறுவில் வாய்மையு
முரவுநீர்க் கடல்சுலா முரனுடை யுலக
மெப்படிக் கணித்தா யினதெனு
மப்படிக் கணித்தா யினவணி மைத்து.

இது, பன்னிரண்டடியான் வந்த வாசிரியம்.
அஃதான்று (இதுவுந் தனிச்சொல்)

நிலைமண்டில வாசிரியம்.

மணியினும் பொன்னினும் புனைபொலந் துகிலினு
மணிதிகழ் செவ்விபெற் றலர்நறு மலரினு
மான்மதக் குழம்பினும் வாசமோ ரைந்தினு
மானவை யுறுதகைத் தன்றெனத் துறந்தே
வாய்மையி னகந்தூய் மையராய் வடிவமுந்
தூய்மையுற் றனராய்த் துறவறத் தொழுகுபு
செந்நிறப் பிருதிவித் திருவுடை யாடையு
முய்ந்நிலைத் தெனப்பொறித் துளவிலாஞ் சனையுந்
திருமணி வடமுந் தியான சிந்தையிற்
பொருளுரை புலப்படப் புலப்படு திருமனு
மேவிய பெருந்தகை மையினடி விளக்கிப்
பூவினுள் ளவள்பணிப் பினிற்பரிந் தூட்டிய

சேடம தருந்தித் திருமகள் கோன்புகழ்
பாடியா டியபத் தியர்திரு மேனிக்
கருந்தவக் காந்தியெவ் வளவணித் ததுபோற்
றிருந்திய சிறப்பினிற் செறியணி மைத்து.

இது, பதினாறடியான் வந்த, நிலைமண்டில வாசிரியம்.

அஃதான்று, (இதுவுந் தனிச்சொல்)

தமரா யுள்ளவர் தமைத்தொடர்ந் துயிரொடங்
கமர்புரிமிடிநிரப் பேயென் ருமிடர் கடிதலெனதென
வினைவிழை பவன்முய லனுளனு ளின்புற்றே
யனவரத முறைதரு திருவும்போன் றணித்து.

இது, முதலடி யிரண்டு மளவடித்தாகவும் மூன்றாமடி யறுசீரடி முடுகியலாகவும் நான்காமடி முதல் முச்சீர் முடுக்கிய லாகவும் ஐஞ்சீரடி யான் வந்த வாசிரியம் - என்னை? "காமர் கடும்புன" லென்னுங் குறிஞ்சிக்கலியுள்ளு மிவ்வாறு வந்தமை காண்க. "வெண்டளை விரவிய மாசிரியம் விரவிய, மைஞ்சீரடியு முளவெண மொழிப" எனவும், "அறுசீரடியே ஆசிரியத்தளையொடு, நெறிபெற்றி வரூஉ நேரடி முன்னே" என்பதனானு மறிக.

நேரிசையாசிரியப்பா.

இசைதிசை திசைநசை பெறவுற வசைதீர்
நிதியிழை பண்பா லறனுட னுயர்நல
னெனமையுந் தோய்ந்தருள் கென நாளும்
யாமே நீங்கல மெனவுரி மையவாத்
தாமே தகவெதிர் தன்மைய வாகிக்
கூடிய குறியுடைத் தெனலாய்
நாடுடன் பீடுடை நகரணி மைத்து.

இது, ஆறடித்தாய்(?)முதலடி யறுசீரடி முடிகியலாகவும் இரண்டாமடி யிருசீர் முடுகியலாகவு 'மென' என்னுஞ் சொற்சீரடியும் பெற்று ஏனையடிகளளவடித்தாகியு மீற்றயலடி முச்சீராகவும் வந்த நேரிசை யாசிரியப்பா.

நிலைமண்டில வாசிரியப்பா.

பிறப்பெனப் பெயரிய பிணக்கொரு வித்தா
யறப்படி றிழைக்கு மவாவெனு மவிச்சையை
நிலையுத லிவைநிலை யுதவில விவையெனுங்
கலைபல வுணர்ந்த காட்சியி னீக்கி
யையுணர் வடைந்த விச்சையோ ருள்ளத்
திடையருத் திறத் தீண்டி வின்ப
மடைதரு நிலைமைய தெனவணி மைத்து.

இது, எட்டடியாய்வந்த(?) நிலைமண்டில வாசிரியப்பா

நேரிசையாசிரியப்பா.

இருநிலத் தழுவலன் பெய்துமென் னிதயமுந்
திருவுரு நலனிவை சிறந்தலிற்
பொருவரு நின்னையும் போன்றணி மைத்து

இது, மூன்றடியான்வந்த, நேரிசை யாசிரியப்பா.

நேரிசையாசிரியப்பா

மூவுரு முக்குண முத்தொழி லெனவிசை
யாவையுந் தனவா விசைந்தமை யன்றியு
மோருரு வொருகுண மொருதொழி லெனதெனு
நாரண னுலவா நன்னர்மன் னுயிர்தொறு
நீப்பின் றூஉ நிலைஇப
யாப்பென் னணமணித் தற்றணி மைத்து

இதுவும், ஆறடியாய்வந்த நேரிசையாசிரியப்பா.

அன்றியும் (தனிச்சொல்)

சுரிதகம்

எம்மனோர் வைகுறு மேமமா ளிகைமிசைக்
கொம்மை வெம்முலைக் கோதையர் முன்கைக்
கிளியினம் வைகலுங் கேசவா கதியெனு
மளியநன் பொருளுரை யஃதிரு செவியுற
வொளிகிளர் நும்மலை யுறைபசுங் கிளியினமங்
கேட்டவை தாமுங் கேசவா கதியெனக்
கோட்டினுட் குடம்பையிற் குதலையின் மிழற்றும்
படிக்கணித் தென்றற் பையு
ளடிக்கொளு மனத்தி னழுங்க னீயே.

இது, ஒன்பதடித்தாய், நேரிசை யாசிரியப்பாவா லிற்ற சுரிதகம். இது, "தொன்முறை யியற்கையி" னென்னும் பரிபாடலு ளிரண்டாம் பாட்டிறுப்புடை நடைத்தாய் வந்தது. பகுதி-இயற்கை. துறை - இடமணித்துக்கூறி வற்புறுத்தல். 4

# கம்ப ராமாயணம்

## பாலகாண்டம்

## 14. வரைக்காட்சிப் படலம்.

சேக்கிழார் மொழியையு நோக்குத னன்று.

576 பக்கத் தொடர்ச்சி

**உ**ண்மையை உணர்ந்தபின்னும், "யாரென விளம்புகேன் நான் எங்குலத் தலைவற்கு உம்மை" என்று வினவிய அறிவுசா லனுமனுக்கு 'மெய்ம்மையின் வேலிபோல்வான்' என்னு மடைமொழி யளித்தவாற்றால் கம்பர், பரிமேலழகரது உரைக்கிணங்கி நாயனார் வாய்மையின் இலக்கணத்தை வகுத்த பரிசு கண்டோம். பின், "வெய்யவன் கோபமுற்றிச் சிவந்தனன் ஒத்தனன் குணக்குன்றிலே" என்னுமச் சிலேடையொடு தொடர்ந்த தற்குறிப்பேற்றத்தினால் அவ்வுரையாசிரியரினின்று விலகி இப்புலமையோர் சேத்தார் பெருமையைத் திருவள்ளுவரது நினைவிற்கொக்க நிலைநிறுத்திய பெற்றியு மோர்ந்தனம். இவ்விரு திறத்திலும், பரிமேலழகரும் மணக்குடவரும் பெரும்பாலும் ஒத்திருக்குங் கருத்தினர். உரையாசிரியர் இவ்விருவரோடும் ஒருங்கே உடன்பட்டும், எதிரே மாறுகொண்டும்,குறளின் உறுபொருளின்னதென நம் கவிக்கரசு கைக்கொள்ளும் செவ்விகள் இவை. அவ்விருவரும் வேறுவேறு பொருள் காணுமிடத்து ஓரமின்றி ஒவ்வொருவர் சார்பு ஒவ்வோரிடத்தில் நிற்கின்ற அமயங்களும் நேர்ந்துள.

கூறியது கூற நயந்திலம். ஈதலின் ஊதியம் புகழெனக்கொண்டு இப்பின்னதனைப் பெறுதற்கு முயல்தலோ, அற்றலாது ஈதலாதி நற்கருமங்களாற்றி இசைபட வாழ்தல் வகையில் இல்லறமமர்ந்தோர் கடனென நுனித்தலோ தக்கதென வள்ளுவர் கருதினரென்பது முன் வேள்விப்படலத்தில் மாவலியின் சரிதையின் சார்பாக ஆராயப்பெற்றுளது. "ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என்ற குறளிற்குப் பரிமேலழகர், "வறியார்க்கீக;—அதனாற் புகழுண்டாக வாழ்க, அப்புகழல்லது மக்களுயிர்க்குப் பயன் பிறிதொன்றில்லை யாதலான்" என உரை கண்டதாலும், 'புகழ்' என்னுமவ்வதிகாரத்தை, "இல்வாழ்க்கைமுதல் ஈகையீறாகச் சொல்லப்பட்ட இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப்பயனாகி இவ்வுலகின்கண் நிகழ்ந்துநிற்குங் கீர்த்தி" எனத்தோற்றுவித்ததாலும் அவர் இல்வாழ்க்கையால் வேண்டப்படும் பயன் புகழென்றும், அப்புகழை நல்கவல்லன ஈகையாதி யறங்களென்று கருதினரென்பதும் தெரிகின்றன. மற்றுப் "புகழாவது புகழ்படவாழ்தல்', என அதிகாரத்தை விளக்கி இக்குறளிற்கு, "புகழ்பட வாழ்தலாவது கொடுத்தல்; அக்கொடையானல்லது உயிர்க்கு இலாபம் வேறொன்றில்லை—இது புகழுண்டாமாறு கூறிற்று," எனப் பொருள் பகர்ந்ததால் மணக்குடவர், அறநெறி வசையற நடப்பதற்கொரு அறிகுறியன்றி, இசை அவ்வறத்தால் வரும் இலாபமன்றென மறுத்தனர். இஃதிவ்வாறாக, கண்டதிறத்தித கைதவமென்னக் கொண்டல்நிறக் குறளிற்கு மூவடிமண் ஈயேல் என விலக்கிய தனதாசிரியனுக்கு அறிவுநனி கொளுத்திய மாவலி,

கட்டுரை யிற்றம நைத்துள போழ்தே
இட்டிசை கொண்டற னெய்த முயன்றோர்
உட்டெறு வெம்பகை யாவ துலோபம்
விட்டிட லென்று விலக்கினர் தாமே.

[தம் செல்வம் இருக்கின்ற காலத்திலே, கொடுத்து இசை பெற்று அறத்தினை எய்த முயல்பவர்களை உட்பகையாகக் கெடுப்பது லோபகுணம். ஆதலால் அதனை விட்டுவிடுங்கள் என்று தன் கட்டுரையால் விலக்கினர்]

என்று மேற்கோள் கூறுகின்ற கட்டுரை திருவள்ளுவரதே என எண்ணும் வண்ணம் "இட்டிசைகொண்டு" என்னுஞ் சொற்கள் "ஈதல் இசைபட வாழ்தல்" என்னுஞ் சொற்களோடிணங்கிநிற்றலால், எய்த வேண்டியது அறமென்பதும், அவ்வற மெய்துமாறு ஈகை என்றும், இசையென்னுமது இடைப்பிறவரலாய், முயற்சி தக்கபடி நிகழ்கின்றதென்பதற்கு அறிகுறியாய் நிற்கின்றதென்பதும் கம்பர் மணக்குடவரோடு கருதினரென்னற் கிடமுள்ளது. 'விலக்கினர்' என்பதற்கு 'வள்ளுவர்' என்னுமத் தோன்றாஎழுவாயை வருவித்து இச்செய்யுளின் பொருளைச் செவ்வனே முடிக்கலாம். இவ்வாராய்ச்சியின் விரிவை வேள்விப் படல விளக்கத்தில் காணலாமாதலின்,பரிமேலழகரும் மணக்குடவரும் மாறுபடுமிடத்தில் கம்பரது கருத்து மணக்குடவரதனோடு இணங்கி இருப்பதை நினைவு கொள்ளற்கு மட்டுமேஇவ்வளவுஇங்குக்கூறலாயிற்று.

இசைவரும் இசைவரும் எனமதித்து ஈதலும்,ஒரு வழி குறியெதிர்ப்பைக் கொடுக்கும் நீர்மையுடைய தாம் குறையுறத் தோன்றுமென நாணிய கம்பர், "ஈதல் இசைபட வாழ்தல்..." என்னு மக்குறளிற்கு உரித்தாய இருண்டு பொருளினும் உயர்ந்த பொருளினை உவந்து ஏற்றனர். அப்பொருள் இங்கு மணக்குடவரதாக அமைந்திருந்தது. மற்று இவ்விதம் இருபொருள் எய்தவல்ல இடத்தினில் பரிமேலழகர் உரை உயர்ந்ததாயின் அதுவே கம்பருக்கு உரியதாம்.

திருக்குறளின்'தீவினையச்சம்' என்னு மவ் வதிகாரத் தலைப்பிற்குப் பரிமேலழகர், "பாவங்களாயின செய்தற்கு அஞ்சுதல்" எனவும், மணக்குடவர் "தீவினைகளைப் பிறர்க்குச் செய்யாமை" எனவும் பொருள் கூறுவாராயினர். இவ்விரண்டின் நுண்ணிய பேதம் ஒன்றுளது. பிறர்க்குத் தீவினைகளைச் செய்யாதிருப்பாரெல்லாரும் நல்லார் என நினைப்பதற்கில்லை. காலமும் இடமும் வாய்க்கப் பெறுமையால் சும்மாவிருத்தலும் கூடும். செய்யும் ஆற்றலில்லாத காரணத்தால் பிறர்க்குத் தீவினை செய்யாததால் தீவினைக்கு அஞ்சுவாரலர்-தீவினை செயற்கே அஞ்சுபவர். தீவினை செய்ய நயப்பானெனின் நயந்தவதனை நடத்திவைக்காவிடத்தும் பாவமோ எஞ்சிற்றிலது. அதுவுமன்றித் தீவினைக்கு அஞ்சுதல்வேறு, அவைகளைச் செய்தல்வேறு. நிமித்த மெதுவேயாயினும் தீவனை செய்யவேண்டுமெனும் நோக்கத்தைச் சிந்தனையிற் கொள்வதற்கொரு அச்சத்தைக் குறிக்கின்றது வள்ளுவாது இவ்வதிகாரம். செய்யப்புகும் தீவினைக்கு இலக்காயிருப்பவனை முன்வைத்து எழுந்ததன்று இது. அச்செய்தி "இன்னா செய்யாமை" என்னும் வேறோர் அதிகாரத்துள் அடங்கியுளது. அவ்வதிகாரத்தின் ஒவ்வொரு பாட்டிலும் 'பிறன்' என்பதைக்குறிக்கின்ற சொற்களைக் காணலாம். மணக்குடவர், 'தீவினை' என்பதனையும் 'இன்னா' என்பதனையும் ஒரு பொருளனவாகக் கொண்டும், 'அச்சம்' என்பதற்குச் 'செய்யாமை' என்ற பொருளையே சேர்த்தும், இவ்விரு அதிகாரங்களுக்குள வேற்றுமையை வைக்காமல் விட்டனர். பரிமேலழகர் அதனை அயர்ந்திலர். தீவினையச்சத்தை மனத்தின் சார்பாகவும் இன்னாசெய்யாமையைச்செயலின் சார்பாகவும் கருதினர். "மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின், அறஞ் சூழும் சூழ்ந்தவன் கேடு" என்று'தீவினையச்சம்'என்னும் அதிகாரத்தில் வந்துள குறள் பிறன்பால் செய்யலாவதை முன்னிட்டுப் பகர்வதுபோல் தோன்றுமெனினும், பரிமேலழகர் 'சூழற்க' என்பதற்கு 'எண்ணுதொழிக' என்றே பொருள்கூறித் தன் கொள்கையைக் காத்தனர்.மணக்குடவர் அக்குறளிற்கு, "பிறனுக்குக் கேட்டை மறந்துஞ் சூழாதொழிக; சூழ்வானாயின், அவனாற் சூழப்பட்டவன் அதற்கு மாறாகக் கேடுசூழ்வதன் முன்னே சூழ்ந்தவனுக்குக் கேட்டைத் தீமை செய்தார்க்குத் தீமைபயக்கும் அறந்தானே சூழும்" என்று வரைந்த உரையில், சூழ்தல் என்பதற்குச் செய்தல் என்ற பொருள் நேர்ந்திருக்கின்றது. மிகுதிபற்றிக் கூறுங்கால் இன்னா செய்பவன் அழுக்காற்றினுதல் செற்றம் பற்றியாதல் பிறர்க்குக் கேடுறுதல் வேண்டுமெனும் நோக்கமே முன்கொண்டு செய்கின்றான்; தீவினை செய்பவன், அச்செய்கையால் பிறர்க்குக் கேடுவந்தெய்தலாமாயினும், தான் ஓர் சுகமேனும் இலாபமேனும் பெறுதலை முதலான நோக்கமாகவுடையவன். தெய்வமிகழ்தல்போன்ற பாவங்கள் பிறர்க்கு ஓர் தீங்கு நினையாமலே நிகழவல்லன. ஆதலின் செய்கையால் பிறர்க்குக் கேடு செய்தலை 'இன்னா செய்யாமை' என்னும்அதிகாரத்தில் அடக்கித் தீவினையைத்தீவினை இதுவென்றே வெறுத்து இடங்கொடாதகற்றி விடவேண்டிய மனத்தின் பயிர்ப்பைப் பரிமேலழகர் 'தீவினையச்சம்' என்னுமதிகாரத்தில் கண்டு பாராட்டினர்; கம்பநாடர் இதனையே தக்கதன ஏற்றனர். ஏற்று, அகலிகைப் படலத்தில் இந்திரனை, "தீவினை நயந்து செய்த தேவர்கோன்" எனக்குறித்தனர். அகலிகைக்கு இன்னா செய்யவேண்டுமென்பது இந்திரன் கருத்

தன்று. தான் ஓர் இன்பம் பெறவேண்டுமென்று உன்னினன். அவ்வின்பம் ஒரு தீவினை ஆற்றித்தான் பெறுதற்கான நிலையிலிருந்தது. அவன் அத்தீவினையை அஞ்சாது நயந்தனன். அஞ்சவேண்டிய தீவினையை அஞ்சாதிருந்த அவன் கயமையைக் காட்டுமாறு தீவினை நயந்து செய்த தேவர்கோன் எனச் சுட்டினர் கம்பர். 'தீவினை அச்சம்' என்பதற்கு எதிர்நிலை "தீவினை நயப்பு" என இவ்வாறு காட்டியவாற்றால் நம்பரும் பரிமேலழகரைப்போல், இவ்வதிகாரத்தால் பாபத்தின்பால் பயிர்ப்பு வேண்டுதலையே வள்ளுவர் குறிக்கொண்டாரென எண்ணுபவ ராயினர். மணக்குடவர் கருதியபடி இவ்விரு அதிகாரங்களும் 'பிறர்க்குச் செய்யாமை'யையே குறிக்குமெனின், பிறர்க்கு இன்னா செய்தலினும் கொடியதாய தீவினை அஞ்சாமையை வள்ளுவர் விலக்காது விட்டகுறை ஏற்படும். ஆதலின் அதனை நிறைவித்த பரிமேலழகருடன் கம்பரும் இங்கு வள்ளுவர் பொருள் நிறைய வெண்ணினர். அச்சம் என்னுஞ் சொல்லிற்குச் "செய்கையை மேற்கொள்ளாமை" என்ற பொருளினும் "செய்வதற்குக் கருத்துட் கொள்ளாமை" என்னும் பொருளே ஏற்புடைத்து என்பதற்குத் திருக்குறளின் "இரவச்சம்" என்னுமவ் வதிகாரத்தலைப்பும் ஆதாரமாகின்றது. ஆயினும் அவ்விடத்தும் பரிமேலழகர், 'இரவச்சமாவது மானந்தீரவரும் இரவிற்கு அஞ்சுதல்" என்பர். "இரவச்சமாவது இரத்தலைத் தவிரவேண்டுமென்று கூறுதல்" என்பர் மணக்குடவர்.

முப்பால் நூலுக்கு உரைசெய்தோர் கருத்தினை மருவியுந் தவிர்ந்தும் கம்பர் வரைந்துள வாய்மையைக் கண்டனம். உள்ள நூலின் பொருளைத் தத்தமுணர்விற் கிணங்க விளக்குவதொன்றே உரையாசிரியர் கைக்கொண்ட கருமத்து ளடங்கும். உரைகாணற் கமைந்த நூலின்கண் கூறப்படாதனவற்றைச் சேர்த்துக்கொள்ளவும் கூறியிருப்பனவற்றைத் திருத்திச் செப்பவும் அவர்களுக்குரிமையில்லை. அவ்வுரிமையும் பெருமையும் தனிநூல்வரைகின்ற புலவர்க்கே யுள. அதனினும் புலவர் பெருமானாய கம்பர்பிரானுக் கமையாத வுரிமை ஒன்றுமிலது. வேட்டைமேல் வந்த தன் இளைப்புநீங்க அறுசுவைத்தாய வுண்டிநல்கி உவப்பித்த வசிட்டனது தெய்வமாப் பசு சுரபியைத் தன்னுடைமையாய்க்கொளற் கவாவிய கோசிகவேந்தன், "தீதறுகுணத்தான் மிக்க செழுமறை தெரிந்த நூலோர் மேதகு பொருள்கள் யாவும் வேந்தருக்கு என்கை" என்னுமந் நியாயங் கூறி "இத்தேனுவை எற்கருள்" என்று வற்புறுத்தினன். கவிச்சக்ரவர்த்தியாதலால் கம்பருக்கும், இவ்வுரிமை வாய்த்தது. மேதகு நூற்பொருள் எவ்வயின் யாவர்மாட்டு இருப்பக் காண்டலும் உளமுண்டேல், இவரதனை எடுத்துத் தன் சிந்தனை செல்வழி சேர்த்துக்கொள்வா ராகின்றனர். பொதுமறைத் தேவரும் திருத்தக்கதேவரும் இவ்வகையிற் றனக்குத் திறைவழங்கப் பெற்றவர் கம்பர். அவைகளை இக்கட்டுரையின்கண் பல்வேறு இடங்களில் அளந்துளோம்.

திருவள்ளுவர் நூலினின்று குறளொன்றை எடுத்தமைத்த கம்பர் அதனைக்கொண்டே அவர் கூறாதுவிட்டவொரு செய்தியை இவர் சேர்த்தனரோ என்ன முன்னர்க் குறிக்கப்பெற்றுளது. ஈகையையும் இரவையும்பற்றி யாவும் வகுத்தனர் வள்ளுவர். எனினும் ஈவதுவிலக்குங் கயமையைப் பற்றிப் பகர்ந்திலர். 'அழுக்காறாமை' என்னுமவ் வதிகாரம் பிறனாக்கங் கண்டு பொறாமையுறுகின்ற நெஞ்சத்தினிழிவையும் அதனால் வருங் கேட்டையுமே கூறுகின்றது. அழுக்காறு செய்தல் ஈவதுவிலக்குவ தென்ற வொரு கருமமே அலது. பிறன்மனைக்குத் தீவைத்தலும் அவனைப் பழித்துரைத்தலும் ஆய சில செயல்களும் அழுக்காறுடைய நெஞ்சத்தால் தூண்டப்படுபவைக ளாம். "கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக்கெடும்" என்னுமக்குறட்பா, கொடுப்பதை அழுக்காற்றினாற் தடுப்பதன் தகையின்மையை மாத்திரங் கடிந்துரைக்கின்றது. அழுக்காறின்றியும் கொடுப்பதைத் தடுப்பதற்கொத்த நிமித்தங்கள் பல நேரலாம். ஒரு கொடையால் கொடுப்போனுக்குத் தீது வரலாமென்றும், ஏற்போனுக்குத் தீது வரலாமென்றும், ஈவதுவிலக்க முயல்வதும் கூடும். பொருள்நிலைச் சாத்திரங்களைப் போதிக்கும் நிபுணர், ஏழைகளுக்கு இடுவோமாயின் அவர் மெய்வருந்திப் பெறவேண்டுமெனும் நினைவற்றுச் சோம்பேறிக் கெடுவரெனுங் காரணத்தால் ஐயமிடுங் கையைப் பிடித்தகற்றுவர். இவ்வீகை விலக்கப்பெற்றது அவ்வியத்தாலன்று. அவ்வாறே இயற்பகைநாயனார்தம் சுற்றத்தாரும், மனைவியை அளித்த பழிநின்று அவனைக் காப்பதற்கெண்ணியே அக்கொடையைக் கடிந்தன ரல்லால் வேதியன் இவளைப் பெற்றானென்னு மவ்வியத்தால் அவ்வீகையை விலக்க முயன்றாரலர். "ஈவது விலக்கேல்" என்ற ஒளவைபிராட்டியார் திருவாக்கில் 'விலக்குதல்' என்பதற்கு அழுக்காற்றால் விலக்குவதென்றும் அஃது இலாது வேறுநோக்கங்களால் விலக்குவதென்றும் வரையறை அமையவில்லை. வள்ளுவர், கொடுப்பதழுக்கறுப்பானையே சபித்து, ஈதல்விலக்கல்பற்றி வேறொன்றுங் கூறாததால், ஏனைய நோக்கங்களால் விலக்குதல் அவ்வவ் வமையங்களுக் கேற்றபெற்றி அறமும் மறமுமாம் எனக் கருதினர் என்னுமவ்வண்ணம் அவர் நூல் நிற்கின்றது. இதனை உன்னியோ கம்பர், வள்ளுவர் தமக்கையொடு தானுஞ் சேர்ந்துகொண்டு, கொடுப்பது 'அழுக்கறுப்பான்' என்னாது, "கொடுப்பது விலக்கு கொடியோய், உனது சுற்றம் உடுப்பதுவு முண்பதுவு மின்றிவிடுகின்றாய்" என்று தன் கொடையைத் தடுத்த வெள்ளியை மாவலி சபிக்கச் செய்கின்றார். அண்டமும் முற்றும் அகண்டமும் மேனாள் உண்டவன் இவ்வையமும் இன்று பெறுவதோவெனப் பொறாத மனத்தினனன்று சுக்கிரன் இன்று கடிதின்புக் கிவ்வீகையைத் தடுத்தது. மாவலியின் ஆக்கம் சிதைவுறுதற் காற்றாக் கருத்தினாலேயே அசுரகுரு அது செய்யலாயினன். ஆதலின் கம்பர், குறட்பாவின் சொற்களில் ஒன்றிரண்டு மாற்றியமைத்து அந்நூலி லில்லாதவொன்றைச் சேர்த்துக் கொண்டனர் என்பது அமையும்.

எனினும், ஒன்று நாமிங்கு மறத்தலாகாது. இது மாவலியின் வசையேயன்றிக் கம்பர் கூற்றன்று. வள்ளுவரும்பின்னாக முன்போந்த இவ்வறத்தின்திறம் மாவலி வள்ளலின் மாண்போ, மற்றுக் கம்பர்தம் கருத்தும் அதுவேயோவெனத் துணிந்து செப்புதல் சிறிது அருமையே. சேக்கிழார்பெருமான் "ஏனைய சுற்றத்தாரும் வானிடை யின்பம் பெற்றார்" எனத்தம் இயற்பகைநாயனார் புராணத்தை முடிப்பதினின்று, அழுக்காற்றினலாது, மானம் நோக்கியும் பழியஞ்சியும் பெரும்பித்தி



னால் ஈகின்றானென்றும், இன்னபிற நோக்கங்களானும் ஈவதுவிலக்குவாரும் கெடுதல் வேண்டுமெனும் நியதியின்மையை விளக்கினர்போலும். பெரியபுராணமுடையாரும், கம்பரைப்போல் திருக்குறளை நன்கு பயின்றவர். இப்புராணத்திலேயே "செய்வதற் கரிய செய்கை செய்தநற் றொண்டர்" என அவர் இயற்பகையைப் புகழ்கின்ற மொழிகள் "செயற்கரியசெய்வார் பெரியர்" எனுந் திருக்குறளின் மொழிகளை அடுத்திருக்கின்றன. இரந்து வந்தவோ ரந்தணனுக்குத் தன் நன்மனை யளித்த நாயனார் நற்றொண்டினாற் றலை நவில்வராய சேக்கிழார், அந்நாயனார் சுற்றத்தாரை வானாட்டு இன்பத்திற் சேர்ப்பிக்க நினைத்ததன் காரணம் நன்கு விளங்கவில்லை. சிவனடியாரை நேசித்து முத்திபெற்றார் இயற்பகையெனின், அவ்வடியார்களைப் பகைத்து முத்திபெற்றார் சுற்றத்தார் என்னுமக் கொள்கையை இங்கு ஆராயாது, ஈவது விலக்கியோரிவர் என்னுந் தன்மையையேநினைத்து நோக்குங்கால், விலக்கிய சுற்றமே வாழ்ந்ததெனின் விலக்கினோன் சுற்றம் கெடுவ தெங்ஙனமெனும் ஐயமுற் றெழுவது மியற்கையே. அழுக்கா றல்லாக்கால் கொடுப்பது தடுப்போர்க் கழிவில்லை எனச் சேக்கிழா ரெண்ணியாங்கு வள்ளுவருமெண்ணி அதற்கோர் அதிகாரம் தந்திலர் என்பது முண்மையாமோ!

# மலர்வனம்

## களவினுட் களவு.

கள்ளச் சிறுமிகள் கைதவங் கேண்மோ! வந்தனன் கண்டனன், மடவாள் புணர்ந்தனன். நாள்நனி நடந்தன. வரைவலென் றோருரை வழங்கிலன் வள்ளல். மன்னன் செய்த புதுப்புண்கள் அன்னை காணிலென்செய்கோ வென அழுங்கினள் அவள். ஆயும் ஐயரும் அறியாவரையில் அழிவில்கூட்டம் தனக்குளதென விருந்தனன் இவன். ஊரல ரிதுவென உரைத்தனள் பாங்கி; காதல ரெனவந்து ஏதிலராவது அறியாத் தம்மூர் தன்மையும் ஓதினள். வரைவின்பால் அவர்க்குள வேட்கை அறியானல்லன்; அன்பிற்றானும் அணுவி னளவிற் றாழ்ந்தவ னல்லன். வரைவிடை வைத்துப் பொருள்வயின்பிரிதற் கஞ்சிய நொய்யன். 'நாளை நாளை நாளை நவில்வல்' என்னாவென்னாத் தாழ்ந்தனன். என்செய்வாள் செல்வச் சிறுமகள்; பரிவுடைப் பாங்கியும் என்செய்வாள். "தாயும் சுற்றமும் சீறார்மக்களும் தெரியவந்து எம்மரு மரிவையை வரைதல் செய்தி" என நேரே சென்று நவின்றிட நாணினள். மடவார்க் கிஃதொரு நீர்மையு மன்று. தலைப்படுமிடமும் தினைப்புனக்காவலும் நிலையுற மளவு தளரா னவனென வோர்ந்தனள். மற்றினி இஃதிலதாவ துணர்ந்தால் நெறிபிறிதிலதென வரைவது நேர்வான் என்னா வுன்னினள் நன்னுதற்றோழி. இதனைத் தானும் நேரிற்சென்று செப்பினள் என்னின் நயப்புரை யாமென நினைத்தலுங் கூடும். ஆதலின், வெள்ளைக்கள்ளம் இயற்றினளொருத்தி. அதனைக் கொள்ளம்பக்கனார் நற்றிணை நானூற்றுள் கற்றோரிதயங் களிகூரப் பாடியுள்ளார். நண்பர்காள், கேட்டு நனி மகிழ்மின்:—

தட்டையுங்கவணும்புடைதயங்கப் பரணயலமர்ந்து தோழியுந் தலைவியும் தம்முள்மருவி யுரையாடாநின்றார். பெருநாள் வருவழி வந்துள வங்கணன் சிறைப்புறமாகி இவர்பாலெய்தச் செவ்விநோக்கிச் சற்றேதாழ்தலும், அதனைக் கடைக்கணினறிந்தும் அறியாள்போல அருமறை யிதுவெனத் தோழி தன் தலைவிக்கு நினைவுறுத்தி னையும்நிமித்தம் புறமுள அவன் செவிகொள உரைப்பாள்:—

யாங்கா குவமோ வணிநுதற் குறுமக
டேம்படு சாரற் சிறுதினைப் பெருங்குரல்
செவ்வாய்ப் பைங்கிளி கவர நீமற்
றெவ்வாய்ச் சென்றனை யவணெனக் கூறி
யன்னை யானுள் கழற முன்னின்
றருவி யார்க்கும் பெருவரை நாடனை
யறியலு மறியேன் காண்டலு மிலனே
வெதிர்புனை தட்டையேன் மலர்பூக் கொய்து
சுனைபாய்ந் தாடிற்று மிலனென நினைவிலை
பொய்ய லந்தோ வாய்த்தனை யதுகேட்டுத்
தலையிறைஞ் சினளே யன்னை
செலவொழிந் தனையா லளியைநீ புனத்தே.

["என் உயிரனாய், உன் அன்னையானவள், "அழகிய நெற்றியையுடைய, ஏ சிறுமி, தேன் பெருகும் மலைச்சாரலில் வளர்ந்த நம் சிறிய தினையின் பெரிய கதிரைச் சிவந்த வாயுடைய பச்சைக்கிளி கவர்ந்துகொண்டு போம்படி நீ காவலொழிந்தெவ்விடம் சென்றிருந்தாய்?" என்று உன்னை வற்புறுத்தி வினவியபோது, நீயோ பொய்ப் போக்கொன்றும் சொல்லாதவளாய் ஐயோ, என் செய்வோம், அவன் முன்னின்று, "மூங்கிலைப் பிளந்துசெய்த கிளியோட்டும்கருவியைக் கைவிட்டகற்றாத நான், அருவிகள் ஒலிக்கும் பெரிய மலைநாடனை அறியவே அறியேனே, அவனை யான் கண்டதும் இல்லையே, மலர்ந்த பூக்களைப் பறித்து அவனோடு நான் சுனையிலே இறங்கி ஆடியதும் இல்லையே'. என நினைவில்லாது மெய்யையே உரைத்துவிட்டாயே. அதனைக்கேட்ட அன்னை தலைகுனிந்து நின்றான் கண்டாய். ஆதலால் இதன்மேல் நீ தினைப்புனத்திற்கு வரக்கூடுமென்று நினையாதே. அதைக் கெடுத்துக்கொண்டாய் பாவம் பேதாய் நீ. நின் அன்னையின் சினத்திற்கு ஆளாகிய நம்மை இனி அவன் என்ன செய்வானோ!]

இத்தோழியின்கூற்றி லொருசொல்லேனும் மெய்யென்று நண்பர்காள், நம்பற்க. தினைக்குரலைத் தத்தை கவ்வியதுங் கற்பனை, அன்னை அறிந்து வினவியதுங் கற்பனை, அன்னதற்கிந் நல்லாள் மெய்யுரைத்தாளென்ன மொழிந்தமொழி யத்தனையும் பொய்யாய கற்பனையே. சிறைப்புறங் காத்துநின்ற செம்மலின் செவிகுளிரச் சிந்தையுள் சிறிதச்சமும் சென்றுழக்கவிப் படைத்து மொழிகிளவி இமைக்குமளவிற்குள் நுனித்திசைத்தனள் அளவிலா அன்புபூண் டொழுகுமிவ்வாருயிர்த் தோழி. "தன்னையல்லால் பிறிதோர்நினைவு இவள் மறைந்தும் நினைத்திலள்" எனத் தேர்ந்துளனாயினும் அக்காதலன் இன்று தெரிவுறக் கேட்டனன். அவ்வன்பின் மிகுதியால் அற்றங்காக்கும் ஆற்றல்சாலா

இம்மெல்லியல் செய்தி அமுதுமேலமது அருந்திறு லென்ன அவன் ஆருயிர் தளிர்க்குமா புரியுந் தரத் தது. அந்நிலையில் இனி இம்மடவோளைச் சேர்தற் கியலாவகை, வெள்கிவெள்கிச் சிரங்கவிந்த வவ்வன்னை தடுத்தனள் காப்பளென்னுத் தெள்ளிதி னுணர்ந்தானு யின் அவன்மனம் என்படாது!'' யாங்காகுவமோ'', எனச் சொற்றிறங்கற்றுத் துறைபோகிய அத்தோழி துவக்குங்காலே இவனிருசெவியும் நெறித்திருக்கும். மற்றுச் 'செலவொழிந்தனையா லளியை நீ புனத்தே'' என முடிக்குங்கால் அச்செவியுள் செந்தழல் சில பெய்யலாயது. இதற்கிடையில், "தன் குறமகள்பால் கடிந்துரையொன்றுங் கழறுது அன்னை தலையிறைஞ்சி நின்ற தென்கொலோ! தன்னெரு பேதையுங் களவியல் கற்றுளென்னும் நாணமோ, தன்குடி மாசுற்று அலர்கொள்ளற் காயதெனு மச்சமோ, மற்றிக்காதலின் நெறியிடை யூறுசெய்யும் வகை யாதென வன்மமொடு தரைநோக்கி உன்னினளோ!'' என்றென்றினையன நினைந்து நின்றான். வேறினி ஆற்றுதற் கென்னுளது. இந்நாள் பிரியினும் பின்னுள் சென்ற பின்னுதல் அவளைப்பிரிதலின்றிச் சேருமாறு ஒன்றே யுளது. தன்னுயி ரெனத்தக்க அத்திருவேயனை யாளைப் பயந்தளித்த குரவர்பால் விரைவிற் சென்றனன். "பெரியீர், அளியன்யான் நும் பாவையை மணக்குமா பணித்திர்'' என நெடிதுநாள் நீட்டித்த அவ்வரைவினை இவ்வாண்மகன் இன்றவர் எதிர்நின்று கடாவினன். ஊழென வந்தவட் குதவும் நீர்மையால் தோழியின் சூழ்வினை தோற்ற தில்லையே.

" மதுகரம் "

# அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி

சென்றவாரம் அலகபாத்தில் ஸ்ரீமோத்திலால் நேருவின் தலைமையில் அகில இந்தியகாங்கிரஸ் கமிட்டிக்கூட்டம்நடைபெற்றது. இக்கூட்டத்திற்குச் சென்னை தவிர மற்ற விடங்களிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தனர். லாகூர் அடக்குமுறைபற்றிய கண்டனத் தீர்மானம் செய்யப்பட்டது. சட்டசபைப் பகிஷ்கார விஷயமாய்க் கார்யகமிட்டியில் காந்திஅடிகளின் துணையால் ஒரு மத்தியஸ்த முடிவு ஏற்பட, அம்முடிவைக் காந்தி அடிகள் அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் முன் பிரேரேபித்தார். அதாவது, லாகூர் காங்கிரஸ் முடியும்வரை சட்டசபை செல்பவர் சொல்லலாமென்பதும், லாகூரில் கூடும் காங்கிரஸ் பூர்ண விடுதலைத் தீர்மானத்தைச் செய்துவிடின், எல்லாரும் சட்டசபையை விட்டுவிட்டு, சுயராஜ்யவேலையில் உழைக்க வேண்டுமென்பதே அத்தீர்மானம். இத்தீர்மானத்தைப் பற்றி மகாத்மாகாந்தி பேசியதாவது:—

"இத்தீர்மானம் சிலருக்கு வியப்பையும் சிலருக்கு வருத்தத்தையும் தரக்கூடும். இக்காலநிலையின் பல அம்சங்களை நன்குய் ஆராய்ந்து, நாட்டின் நன்மையை ஒட்டிச்செய்த முடிவே இது. நான்எப்பொழுதும் ராஜியை விரும்புபவன். நான் சிறையிலிருந்து வந்தபின் ஒத்துழையாதவனு யிருந்தும் சுயராஜ்யக்கட்சியை ஸ்தாபித்த ஸ்ரீ தாஸருடன், ஸ்ரீ மோத்திலால் நேருவுடனும் ராஜி செய்துகொண்டேன். இப்பொழுது காரிய கமிட்டி செய்துள்ள முடிவு, நானும் ஸ்ரீ மோத்திலால் நேருவுமாய்ச் செய்தமுடிவன்று. நாங்களும் சுயராஜயக் கட்சியாரில் சிலருமாய்ச் சேர்ந்து செய்த முடிவாகும். இப்பொழுது சட்டசபையைவிட்டு வெளியேறுவது சரியான காரியமன்றெனச் சுயராஜ்யக் கட்சியார் கூறிய அபிப்பிராயம் கார்யகமிட்டியால் நன்கு ஆராயப்பட்டது. காங்கிரஸ் பிளவில்லாது நடந்து செல்லவேண்டிய அவசியத்தைப் பகிஷ்க்காரக்காரர் உணரவேண்டும். ஆகவே சட்டசபையில் வேலைசெய்ய சுயராஜ்யக் கட்சியாருக்கு அனுமதி கொடுத்துவிடுவோம். இதை எல்லோரும் அங்கீகரிக்க வேண்டுமென்று நான் வற்புறுத்துகின்றேன். ஒரு மனிதனது அபிப்பிராயம் மிகச் சிறந்ததாயிருக்கலாம். ஆனால் ஒரு காரியம் செய்யவேண்டுமெனில் பலர் சேர்ந்து முடிவு செய்யும் "அபிப்பிராயத்திற்குத் தன் சொந்த அபிப்பிராயத்தைஉள்ளடக்கி வைக்கவேண்டுவது அவசியமாகும் இல்லையேல் கட்டுப்பாடு குலைந்துவிடும். எனவே இப்பொழுது சுயராஜ்யக்கட்சியார் சட்டசபையில் வேலை செய்ய அனுமதி தரவேண்டும். ஆனால் அரசாங்கத்தார் கையாளும் அடக்குமுறை நிறுத்தப்படாமலும், குடியேற்ற நாட்டுரிமை என்னும் நமது கோரிக்கை ஏற்கப்படாமலும் போமாயின் ஜனவரிமாதம் 1ந்தேதி எல்லாரும் சட்ட சபையைவிட்டு வெளியேறி விட வேண்டுமென்பதைஎல்லாரும் உணரவேண்டும். டிசம்பர் மாதம் கூடும் காங்கிரஸ் முழுவிடுதலையே காங்கிரஸின் லக்ஷியம்என்றுதீர்மானித்துவிட்டால்சட்டசபையில் காங்கிரஸ்காரருக்கு வேலையில்லை. பின்னர் இது போன்ற ராஜிக்கு இடமுமிராது. லாகூர் காங்கிரஸ் இன்னும் 5-மாதந்தான் இருக்கின்றது. காங்கிரஸ் மஹாசபை முழுவிடுதலையைத் தனது லக்ஷியமாகக் கொள்ள அவசியமிராதென்று நான் ஒவ்வொரு நிமிஷமும் நம்பிக்கொண்டிருக்கின்றேன். ஆனால் நேரு திட்டம் வெறும் காகிதமாகவே கருதப்படுகின்றதென்பதையும், குடியேற்ற நாட்டுரிமை என்பது கண்ணிற்குக்கூட எட்டவில்லை யென்பதையும் நான் அறிவேன். இப்பொழுது நான் கொண்டுவந்துள்ள தீர்மானத்தின் முக்கியமான நோக்கம் தேசத்தில் கட்டுப்பாடும், ஒற்றுமையும் குலையாதிருக்க வேண்டியே என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஜனவரி மாதமுதல் நமதுகோரிக்கை கவனிக்கப்படவில்லையாயின், பலாத்காரமற்ற ஒத்துழையாமை இயக்கத்தை நடத்த நாட்டில் ஒற்றுமை வேண்டுமென்பதை எவரும் மறத்தலாகாது. ஆகவே நாம் இனிச்செய்ய வேண்டிய வேலையில் ஊக்கம் செலுத்துவதே முறை. சிறுவிஷயங்களில் பிளவு ஏற்படுமாயின் பெரியவேலைகள் கெட்டுவிடும் என்பது எவரும் மறத்தலாகாது. ஆகையால், சிலமாதங்கள்வரை சட்டசபையில் இருந்து வேலைசெய்ய விரும்புபவர்களைத் தடுக்கவேண்டாம். சட்டசபை செல்பவர்களும் அடுத்தவருடம் அவர்கள் கடமை யாதென உணர்ந்துகொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.''

இத்தீர்மானத்தை வங்காளப் பிரதிநிதியான சுபாஸ் சந்திரபோஸ் ஆதரித்துப் பேசினர். ஸ்ரீமான் சதுர்வேதி என்பவர் சட்டசபையை உடனே விட்டுவிட்டு ஆக்கவேலை செய்யவேண்டுமென்று ஒரு திருத்தத்தைப் பிரேரேபித்தார். திருத்தம் ஓட்டிற்கு விட்டதில் தோற்றுப்போயிற்று. கடைசியில் தீர்மானம் நால்வர்தவிர மற்றவர்களால் ஆதரிக்கப்பட்டு நிறைவேறியது.

வேறுசில விஷயங்கள் முடிவு செய்யப்படக் கூட்டம் முடிவுபெற்றது.



## ஏமாங்கதத் திளவரசன்.

T. N. சேஷாசலம் B. A., B. L. இயற்றியது.

இலக்கிய நயங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதற் கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், பேரவாவின் பேதைமையும், புன்கவி புகுந்து செய்யுந் துன்மதிச் சூழ்ச்சியும் பொருந்திக் கலந்து கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஒருதனிச் சுவையுளதென்பதை இந்நூலினுற் காணலாம். சம்பாஷணைத் திறமும், சொல்நயச்சுவையும், கருத்தைக் கவர்கின்ற கதை யமைப்பும், பாத்திரங்களின் பொருத்தமும் வாய்ந்த இந்நாவல்நூல் ஆங்கிலத்தில் ஸர் வால்டர் ஸ்காட் அனைய சிறந்த நாவலாசிரியர்களது நூல்களுக்கு இணையாகத்திகழ்கின்றது.

விலை ரூ. 1-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

## கம்பராமாயணம்.

பாலகாண்டம்.

T. N. சேஷாசலம் B. A., B. L—பதிப்பு.

சிற்றடக்கமாய் அழகிய கட்டிடத்தில், புதிய முறையில் பொருள்விளக்கிப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்கு நேரே பதவுரை எழுதிவிட்டால், படிப்பவர் தம் முயற்சியால் பொருளை ஆய்ந்துகொள்ளும் பழக்கம் பெற இயலாது போய்விடும். ஆதலால் இப்பதிப்பாசிரியர், பதம் பிரித்தும் தொகைநிலைத் தொடர்களை விரித்தும் அன்வயப் படுத்தியும் அவாய்நிலைகளை வருவித்தும் கவியின் வார்த்தைகளைக் கொண்டே செய்யுளின் பொருளை விளக்குகின்றார். அரும்பத உரையும் விசேஷக் குறிப்புகளும் அங்கங்குச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்குக் காட்டியுள்ள பொருள்கள் புதியன. கவியின் ஹிருதயத்தைத் தழுவியவை.

விலை ரூ. 3-0-0. வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

## முருகன் ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S வெங்கடரமணி M.A., B.L. அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய "Murugan, The Tiller" என்னும் சிறந்த நூலிற்கு ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி தமிழிற்செய்த மொழிபெயர்ப்பு. தற்கால நாகரீகத்தின் கொடுமைகளுக்கெல்லாம் காரணம் வாழ்க்கையின் அருமையான தத்துவங்களை மறந்திருத்தலே என்னும் கொள்கை இந்நூலின் கதையோடு மிகவும் அழகாக இழைந்து நடக்கின்றது.

இவ்வகை நாவலை ஆங்கிலத்தில் Domestic Novel என்பார். உழுதுண்டு வாழ்வார் நிலையின் ஏற்றமும், தொழுதுண்டு பின்செல்பவர் நிலையின் தாழ்மையும் இந்நூலின்கண் செவ்வனே எடுத்துக் காட்டப் பெற்றுள்ளன.

விலை ரூ. 1-8-0 வி. பி. செலவு வேறு.

கலா நிலயம்:— 11. வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

## திருக்குறள்

மூலமும் சொற்குறிப்பு அகராதியும்

விஷய ஒப்புக்குறளும்.

வா. மார்க்கசகாயம் செட்டியாரவர்கள்—பதிப்பு.

சிற்றடக்கமாய்ச் சட்டைப்பையில் கொண்டு செல்லத்தக்கப் பதிப்பு. இப்பதிப்பின் அட்டவணை மாத்திரம் முன்னூறு பக்கங்களுக்குமேல் அளிக்கப் பெற்றிருக்கின்றது. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புகின்றவர்களுக்கு இவ்வட்டவணைகளின் அமைப்பு மிகவும் உபயோகமாயிருக்கும். இவ்வட்டவணையின் உதவிகொண்டு நூலைப்பயிலப் பயில அதன் நயம் மேன்மேலும் விளங்கலாகும். இதன் அருமையைப் பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று.

விலை ரூ. 0-12-0. வி. பி. செலவு வேறு

கலா நிலயம்:—11. வேளாளர் தெரு,

புரசைபாக்கம், சென்னை.

## NATIONALBOOKS
### AT HALF PRICE AND LESS.

| | Price—Original Rs. A. | Reduced Rs. A. |
|---|---|---|
| Duties of man, Mazzini ... | 0 12 | 0 6 |
| My Jail Expeiences, by Mahatma Gandhi ... | 0 12 | 0 6 |
| Young India 1919-1922 ... | 4 0 | 3 0 |
| Significance of Indian ... Nationalism, by H. M. Howsin ... | 2 8 | 1 0 |
| India's Challenge to civilization, by H. M. Howsin. | 2 0 | 1 0 |
| Gandhi and Anarchy, by Sir Sir C. Sankaran Nair ... | 1 8 | 0 12 |
| Revolutionary Bisgraphies by R. W. Postgate | 1 8 | 0 8 |
| Philosophy of Non-co-operation, by Bhagavan Das M A. | 1 0 | 0 8 |
| The Plunder of India's Wealth, G. V. K. Rao ... | 1 0 | 0 8 |
| Indian Industrialism, by G. V. Ganapathy Aiyar... | 1 0 | 0 8 |
| Meaniag of Non-co operation, by C. F. Andrews ... | 0 12 | 0 4 |
| Ethics of Destruction, by Mahatma Gandhi ... | 0 12 | 0 4 |
| Key to Yerrowada, by M. Mahomed Ali ... | 0 8 | 0 4 |
| Our Educational Problem, by Lala Har Dayal, M. A. ... | 1 8 | 0 12 |
| Soul of India, by B.C. Pal | 1 8 | 0 12 |
| Advance India and Issue in India by B. Hougton I.C.S. | 0 8 | 0 4 |
| C. D Report (Few copies only left, ... | 1 0 | 0 4 |
| Development of Democracy in India K Rajeswara Row. | 2 0 | 1 0 |
| Non-co-operation in other, lands by Fenner Brockway | 1 0 | 0 8 |
| India and its Government, by Fenner Brockway ... | 0 8 | 0 4 |
| Dyarchy and after, by C. R. Readdy, M.A. ... | 0 4 | 0 2 |
| Charka, with an introduction. by Sir P. C. Roy ... | 0 4 | 0 2 |
| The Science of Sex by an M. D. ... | 2 0 | 1 0 |
| Faded Flower, by K. Rajagopal ... | 1 0 | 0 8 |
| Imperialism, by K. M. Panikar, M. A. ... | 1 0 | 0 8 |
| The New Russia, by & W Postgate ... | 0 12 | 0 6 |
| Premanand and Pushpavati, by Namonarayana ... | 0 8 | 0 4 |
| A passing Phase of politics, by N. C. Kelkar M.L.A. ... | 1 4 | 0 10 |
| Leprosy in India, by T. S. Krishnamurthy Iyer ... | 0 8 | 0 4 |
| India and the Empire, by E. Carpenter ... | 0 4 | 0 2 |
| The Resurrection of the Congress by D. N. Bannerjee ... | 0 4 | 0 2 |
| Christ of to-day, by Rev. Holmes ... | 0 4 | 0 2 |

*Note.*—A further discount of 10 per cent will be given on orders of not less than 15 books from the above list at a time and this concession holds good till the end of December 1929.

B. G. Paul & Co.,
Publishers, G. T. Madras.

## கம்பராமாயணம்

நல்லகாகிதத்தில் செவ்விய அச்சில் அழகிய கட்டிடத்தில் பாடபேதங்களுடன் கூடிய மூலமும் தெள்ளிய பதவுரையும், அகன்ற விரிவுரையும் அணி யாப்பு சொல் முதலியவைகளைப் பற்றிய அருமையான இலக்கணக் குறிப்புரைகளும் அடங்கிய பதிப்புக்கள். இவ்வகை உரைகளை இயற்றிப் பதிப்பித்தவர், வை. மு. சடகோபராமாநுஜாசாரியாரும், சே. கிருஷ்ணமாசாரியாரும், வை.மு. கோபால கிருஷ்ணமாசாரியாரும் ஆவர்.

| | | |
|---|---|---|
| பாலகாண்டம் ... ... ரூ | 5 | 0 |
| அயோத்தியாகாண்டம் ... | 5 | 0 |
| ஆரணியகாண்டம் ... ... | 4 | 0 |
| கிட்கிந்தாகாண்டம் ... | 4 | 8 |
| சுந்தரகாண்டம் ... ... | 5 | 0 |

இவ்வகை உரைகளுடன் கூடிய
அஷ்டபிரபந்தம் ரூ. 3-8

எல்லாப் புத்தகங்களுக்கும் வி. பி. செலவு வேறு. வேண்டுவோர் ஒரு ரூபாய்க்குக் குறையாமல் தபால்தலை முன்னதாக அனுப்பிவைத்துக் கேட்கவேண்டும். எஞ்சிய தொகைக்குத் தபால் செலவுடன் சேர்த்துப் புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படும்.

கலாநிலயம்:—வேளாளர் தெரு,
புரசைவாக்கம், சென்னை.

## Our Publications.

**Kamban's Kosala.**

By T. N Seshachalam: A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

**Thoughts for Statesmen**

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book. Price Rs. 1-8-0.

மேனாட்டுப் பேரறிஞர் நால்வர்.

*கார்லைல், எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய் இவர்தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு.* விலை 0-8-0.

முப்பெரும் புலவர்.

*கம்பர், காளிதாசர், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங் கவிகள் ஜீவிய சரிதை.* விலை அணா 4.

உலக அதியசம். விலை அணா 4.

விசித்திர விளக்கு.

*எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை.* விலை அணா 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணா 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

**The Educational Publishing Co.,**
**Nungambakam, Madras.**




## வர்த்தமானம்

**பகற்கோள்ளை.**—கல்கத்தாவில் மார்வாரிகள் வசிக்கும் பாராபாஸாரில் ரூ.39000பணம் ஒரு தர்வானிடமிருந்து நடுப்பகலில் அபகரித்துச் செல்லப்பட்டது. இத்தர்வான் காயமுண்டு வயித்தியசாலையில்இருக்கின்றான். திருடியவர் இன்னும் அகப்படவில்லை. போலீசார் கண்டுபிடிக்க முயன்று வருகின்றனர்.

***

**தமிழ் மாகாண மஹாநாடு:**—தமிழ் மாகாண மஹாநாடு ஆகஸ்டுமாதம் நாலாவது வாரத்தில் குஜராத் வாசியான ஸ்ரீ வல்லபாய் பட்டேலின் தலைமையிற் கூடும். ஸ்ரீ எஸ். ஸ்ரீநிவாஸ ஐயங்கார் மஹாநாட்டைத் திறந்துவைப்பார். சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் கதர்காட்சிச் சாலையைத் திறந்துவைப்பார்.

***

**யமுனா நதியில் வெள்ளம்:**—யமுனாநதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. பட்டிகரி என்னும் கிராமம் முழுதும் அழிந்துபோயிற்று. சிராஜ்கஞ்சு என்னுமிடத்திலுள்ள தந்திதபால் ஆபீஸிலும், அரசாங்கச் சாலைகளிலும் இரண்டடி ஜலம் நிற்கின்றது. கல்லூரிகள் மூடப்பட்டன. இதுவரை. இவ்வெள்ளத்தால் ஏற்பட்ட நஷ்டத்தின் பெறுமானம் ஐந்துலக்ஷம் என்று தெரிகின்றது.

***

**விவாகவயதுமசோதா:**—தஞ்சைஜில்லாவாசிகளும், திருச்சி மதுரை தென்னார்க்காடு ஜில்லாவாசிகளும் சேர்ந்து விவாகவயது மசோதா ரத்து செய்யப்படவேண்டுமென ஒரு மனுவைத் தயார்செய்து இராஜப்பிரதிநிதிக்கு அனுப்புவித்துள்ளார்கள் என்றும், இம்மனுவில் 2500 பேர் கையொப்பமிட்டுள்ளார்கள் என்றும், அவர்களில் 400 பேர் ஸ்திரீகளென்றும், தஞ்சைஜில்லாப் பிராம்மண மஹாசபைக் காரியதரிசி அறிவிக்கின்றார்

***

**மௌலானா ஷவுகதாலி:**—இந்திய முகமதியர் நன்மையைப் பாதுகாக்க வேண்டுமென்றும், அதனால்முகமதியர் காங்கிரஸில் சேரலாகாதென்றும் மௌலானா ஷவுகதாலி இப்பொழுதுபிரசாரம்செய்துவருகின்றார் என்று தெரிகின்றது. ஷவுகதாலியின் இச்செயலைப் பம்பாய் கிரானிகல் பத்திரிகையின் ஆசிரியரான ஜனப் பிரல்வி என்னும் மற்றோர் மகமதியர் கண்டிக்கின்றார். மேலும், முகமதியர் காங்கிரஸில் சேர்ந்து நாட்டு முன்னேற்றத்தை நாடி உழைக்கவேண்டுமென்று வற்புறுத்துகின்றார்.

***

**ருஷிய பிரிட்டிஷ் சம்பந்தம்:**—சிறிது காலமாக ருஷியாவுடன் சினேக சம்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள இங்கிலாந்தில் முயற்சி நடந்து வருகின்றது. இதை ஒட்டிக் காமன்ஸ் சபையில் கேள்விபிறக்கையில் பாரிஸில் இருக்கும் ருஷியநாட்டு மந்திரி ஜூலைமாதம் 29-ந்தேதி லண்டன் வருவார் என்றும் புதிய அரசாங்கத்தார், பிரிட்டிஷ் ருஷிய சம்பந்த விஷயமாய்ப் பேசுவார்கள் என்றும் பதிலளிக்கப்பட்டது.

***

**பிரஞ்சு மந்திரி பாயன்கர்:**—பிரஞ்சு காபினட் சபை மந்திரியான பாயின்கர் தேக அசௌக்கியம் காரணமாகத் தமது பதவியை ராஜிநாமாச் செய்ய உத்தேசித்துள்ளாராம். அவர் காபினட்டு சபைக்கு விடுத்த கடிதத்தில், தாம் ஆபரேஷன் செய்துகொள்ளப்போவதாகவும், ஆகவே இரண்டு மூன்றுமாதம் ஓய்வு தேவையென்றும், எழுதியுள்ளாராம். எனினும், மந்திரி சபையார், ராஜிநாமாச் செய்யாது ஓய்வு எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதென்று முடிவுசெய்துள்ளார் எனப் பிரஞ்சுச்செய்தி கூறுகின்றது.

***

**புத்தக வரவு:**—காவேரிக்கரையில் மஹாதானபுரத்தில் சித்தியடைந்து கோயில்கொண்டருளிய நிலமாவுமடம் சத்குரு ஸ்ரீ நரசிம்மபாரதி ஸ்வாமிகள் பேரில் இயற்றப்பட்ட தோத்திரப்பாக்களைக் கொண்ட ஒரு பிரசுரம் எமது பார்வைக்கு வந்தது. இப்பிரசுரத்திற்கு உதவி புரிந்தவர் கொத்தமங்கலம் பக்தகேசரி ஸ்ரீ ராம. அரு. வெ. பெத்தாச்சி செட்டியாராவர். இது திருச்சி தெப்பக்குளம் S.கிருஷ்ணஸ்வாமி கம்பனியாரிடம் இனாமாகக் கிடைக்கும். வேண்டுவோர் அரையணாத்தலை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

***

**மதுவிலக்கு:**—சென்னைப் புரசைபாக்கத்திலுள்ள அன்னதான சமாஜத்தில், திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு ஸ்ரீ C. N முத்துரங்க முதலியார் தலைமையில் மதுவிலக்குக்கூட்டம் ஒன்று நடந்தது. ஸ்ரீமான் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார் மதுவிலக்க வேண்டிய அவசியத்தைப் பலவைத்திய நிபுணர்களின் முடிவுகொண்டு வற்புறுத்தினார். மேலும் ஏழைகளின் கஷ்டமும் ஒருசிறிது அகலுமென்று எடுத்துக் காட்டினார். அக்கிராசனர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

***

**சீர்திருத்தக் கமிஷன்:**—இந்தியச் சீர்திருத்த விஷயமாய்ச் சைமன்கமிஷன் அங்கத்தினர்களும், ஸர் சங்கரன் நாயரைத் தலைவராகக்கொண்ட இந்திய மத்தியக் கமிட்டி அங்கத்தினரும் இன்னும் ஆய்ந்து வருகின்றனர் என்றும் சீக்கிரத்தில் அறிக்கை தயாராகுமென்றும் தெரிகின்றன. வேல்ஸ் இளவரசர் சென்றவாரம் இந்தியக் கமிட்டி அங்கத்தினர்களுடன் சம்பாஷித்தனர் என்று தெரியவருகிறது. இந்தியாவின் சில பாகங்களில் ஏற்பட்டுள்ள வகுப்புப் பிரச்னைவிஷயமாக டாக்டர் கவருக்கும், டாக்டர் சக்ரவர்த்திக்கும் ஏற்பட்ட அபிப்பிராயபேத விஷயமாய் எந்த விதமான முடிவும் ஏற்படவில்லை என்றும் சீக்கிரத்தில் முடிவொன்று ஏற்படுமென்றும்சொல்லப்படுகின்றது.

---


**அகத்தியமுனிவர் அருளிச்செய்த ஆறெழுத்தந்தாதி:**— முருகக் கடவுளை முழுமுதற் பொருளாக உபாசனை செய்வதற்குறித்தாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளர் எனக் கருதப்படுகின்ற நூறு செய்யுள் கொண்ட நூல் பென்ஷன் டாக்டர் V. S. அருணாசலம்பிள்ளை யவர்களால் விரிவும் தெளிவும் பொருந்திய உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை 12 அணா

வி. பி. சார்ஜ் வேறு. **கலாநிலயம், வேப்பேரி, சென்னை.**

KALANILAYAM.
REG. NO. M, 2324.

A MOMENTOUS BOOK

# ANCIENT JAFFNA

BY

**Mudaliar C. RASANAYAGAM, C. C. S.**

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

**Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.**

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

**Price Rs. 5-8-0 (V.P. Charges extra)**

*MANAGER:—*

**"KALANILAYAM"**

**11, VELLALA STREET.**

**Purasawalkam MADRAS.**

189065

**1928**-ம் ஆண்டுப் பிரதிகள் பயிண்டு செய்தும் *கலா நிலயம்* செய்யாமலும் எம்மிடம் கிடைக்கும்

1. சேக்கிழாரும் கண்ணப்பரும்

*சேக்கிழார் திறனும், அன்பினது தத்துவமும், கண்ணப்பர் பக்திச் சிறப்பும் விளக்கும். T. P. மீனாட்சிசுந்தரம் M. A. B. L.—51 கட்டுரைகள்.*

2. கம்ப இராமாயணம்

*பாலகாண்டம், ஆற்றுப்படலமுதல் மிதிலைக்காட்சிப் படலம் வரை—T. N. சேஷாசலம், B. A. B. L. 51 கட்டுரைகள்.*

3. அகப்பொருள் வரலாறு

*காட்சிமுதல், ஒதற்பிரவு வரை—K. இராமரத்நம் ஐயர் B. A. 18 கட்டுரைகள்.*

4. காந்திமதி

*காவிய இயல்நலம் பெற்ற நற்றமிழ் நாவல். T. N சேஷாசலம் B. A. B. L. 51 இதழ்களில் வந்துளது.*

5. தமிழ்ப்பாடம்

*நளவெண்பா,—சுயம்வர காண்டம் கலிதொடர் காண்டம். இந்த வருடத்தில் பெரும் பகுதி அணி இலக்கணமும், சொல்லிலக்கணமும் ஓதப்பட்டுளது.*

6. மேனாட்டுத் தத்துவ அறிஞர்

*பிரிடரிக் நிஷேன் எபிகுயூரன் ஜினோன் பைரோன் அரிஸ்டாடல் முதலாயினோர்—T. R. இராஜகோபால்,*

7. இலக்கிய ஏற்ற ஆராய்ச்சி

*E. T. சொக்கம்மாள் B. A; L. T. எழுதியது 6 கட்டுரைகள்.*

8. தேவாரமும் ஐந்திணையும்

*தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்—E. N. தணிகாசல முதலியார் B. A. B. L. 8 கட்டுரைகள்*

9. மேனாட்டறிஞர் கட்டுரை (மொழி பெயர்ப்பு)

*கார்லைல். ரஸ்கின், எமர்ஸன், டால்ஸ்டாய் செஸ்டர்டன், ஆஸ்கார் ஒயில்டு, ராபர்ட் பர்ன்ஸ் முதலாவினோர்.*

10. இலக்கியக் கதைகள்

*புரந்தரனார் பெருந்தவம், சித்ரகூடம், அகத்தியர், சூர்ப்பனகை.—R. முத்தையர்*

11. வானசாஸ்திரம்

*இதன் உண்மைகளை யாவரும் தெரிந்துகொள்ளும் வண்ணம் சுருக்கமாய் எளியநடையில் சொல்லப்பட்டுளது.—20 கட்டுரைகள்.*

மலர்வனம் பழமுதிர்சோலை

*சிந்தாமணி,சிலப்பதிகாரம்,மணிமேகலை, புறநானூறு, ஐங்குறுனூறு, முதலியவைகளினின்று எடுத்தமைத்த தனிநிலை அழகுகள்—14 கட்டுரைகள்.*

*நாலடி நானூற்றின் திறம், சிவகாம் சரித்திர ஆராய்ச்சி. பாரசீகப்புலவர் உமார்காயம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்களும் வந்துள்ளன.*

விலை விபரம்—தபால் செலவு உள்பட:—

| | | | |
|---|---|---|---|
| பையின்டு செய்யாதது | உள்நாடு ரூ 8—0—0 | வெளிநாடு ரூ 9—8—0 |
| ஆப்லெதர் கில்டுபயிண்டு | உள்நாடு ரூ 10—0—0 | வெளிநாடு ரூ 11—8—0 |
| காலிகோ பயிண்டு | உள்நாடு ரூ 9—8—0 | வெளிநாடு ரூ 11—0—0 |

**கலா நிலயம் ஆபீஸ்**, 11, வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)